பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 06 வியாழக்கிழமை (20-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர் :47

# அரசின் தீர்வு முயற்சிகளுக்கு ஐ.தே.க. இடைஞ்சலாக இராது!

## நாடாளுமன்றில் நேற்று ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி20

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி இடைஞ்சலாக இராது. தனது தீர்வு முயற்சிகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.**

**- இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறினார்.**

ரணில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

பரந்த அளவிலான அதிகாரப் பரவலாக்கலுக்கு ஐ.தே.க. உடன்படுகின்றது. நாடு பிளவுபடுவதை அது விரும்பவில்லை. ஆனால் பிராந்தியங்களின் ஒன்றியம் ஒன்றை ஏற்படுத்தும் அரசின் திட்டத்துக்கு ஐ.தே.க. ஒத்துழைப்பு வழங்காது.

யுத்தத்தைமுடிவுக்குக் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு இருந்தால் - அதற்காகத் தான் கொண்டு வரவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு இராணுவத் தளபதி நேற்று மாரடைப்பால் மரணம்

யாழ்.குடாநாட்டின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜே.கே. நிஹால் ஜெயக்கொடி நேற்று நண்பகல் திடீரென மாரடைப்பால் மரணமானார்.

நேற்று பலாலியில் தமது படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த அவர், ஆலோசனை முடிந்து புறப்பட்டசமயம், கழுத்தில் நோ ஏற்பட்டதாகக் கூறிய பின்னர் ஆலோசனைமண்டபத்துக்குள்ளேயே மயங்கிச் சாய்ந்தார்.

உடனடியாக பலாலி இராணுவத் தள ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துச்செல்லப்பட்ட அவர் அங்கு மரணமானார். அவரது சடலம் நேற்று மாலைகொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்தியாவில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக்கொண்டு அண்மையில் நாடு திரும்பியிருந்த அவர், உடனடியாக யாழ்ப்பாணத் தளபதியாக இங்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தார். இப்பதவியை ஏற்று மூன்று வாரங்களில் அவர் மரணமாகியுள்ளார். (உ)

### யாழ். கரையோர

## மீனவர் தம் வள்ளங்களை திருத்துவதற்கு அனுமதி

தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக தமது வள்ளங்களை கடலில் கைவிட்டுள்ள குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதி மீனவர்கள் வள்ளங்களைக் கரைக்கு ஏற்றி அவற்றில் திருத்த வேலை செய்வதற்கு இராணுவம் அனுமதித்துள்ளது.

யாழ்நகரில் உள்ள 512ஆவது படையணித் தளபதியுடன் தாங்கள் நடத்திய பேச்சுக்களின் போது இந்த அனுமதியை உடனடியாக வழங்குவதற்கு அவர் இணக்கம் தெரிவித்ததாக ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலக வட்டாரங்கள் குறிப்பிட்டன.

தற்போது கரையோரங்களில் நடக்கும் மோதல்கள் குறையுமானால் மீனவர்களைக் கடலுக்குச் செல்ல அனுமதிப்பது குறித்துப் பரிசீலிக்கலாம் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் -

இது குறித்து தாங்கள் தொடர்ந்து இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவருவதாகவும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

### இராணுவத்தை விட்டுத் தப்பியோடி

## பிடிபட்ட படையினர் மீண்டும் தப்பியோட்டம்!

### பனாகொடையில் சம்பவம்

கொழும்பு,ஜன.20

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியதற்காக கைதுசெய்யப்பட்டு விசாரணைகளுக்காக பனாகொடை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 17 படையினர் அங்கிருந்து மீண்டும் தப்பி ஓடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணியளவில் அவர்களுக்கான இரவு உணவை வழங்குவதற்காக காவலுக்கு இருந்த படையினர் அவர்கள் அடைக்கப்பட்டிருந்த அறைக்கதவுகளை திறந்தபோது காவலர்களைத் தாக்கிவிட்டு 17 பேரும் தப்பி ஓடினர்.

தப்பி ஓடியவர்களில் ஒருவர் ஹபரக்கட பொலீஸ் சோதனை முகாமில் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## வடக்கில் மோதல் சம்பவங்கள்.

கொழும்பு,ஜன.20

தணங்களப்பு, இயக்கச்சி, முகாவில் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சண்டைகளில் இரு படையினர் காயமடைந்தனர் என்றும் -

விடுதலைப் புலிகளில் 17 உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் கிழக்கு அரியாலையை அண்டிய பகுதிகளிலும் நேற்றுப் பகல்வேளை நேரடி மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பாதுகாப்பு நடவடிக்கை மட்டக்களப்பில் தீவிரம்

மட்டக்களப்பு,ஜன.20

மட்டக்களப்பு நகரப் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

பெரும் எண்ணிக்கையான படையினர் நகரப் பகுதியில் குவிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் -

இவர்கள் நகரின் முக்கிய பகுதிகளை தினந்தோறும் இரண்டு, மூன்று தடவைகள் திடீரெனச் சுற்றிவளைத்து அங்கு தேடுதல் நடத்துகின்றனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அங்கு சோதனை நிலையங்கள் பல புதிதாக உருவாக்கப்பட்டு வாகனங்களில் பயணம் செய்வோர் அனைவரும் தீவிர சோதனைக்கு உட்படுத்துப்பட்டு வருகின்றனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### புலிகள் ஷெல் தாக்குதலாம்!

## செம்மணி வழக்குக்காக யாழ். வர நிபுணர்கள் மறுப்பு

கொழும்பு,ஜன.20

யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுவதால் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளுக்காக இப்போதைக்கு யாழ்ப்பாணத்துக்கு வரமுடியாது என்று அதுதொடர்பான சட்டவைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

செம்மணி விவகாரம் அடுத்த திங்களன்று யாழ்.நீதிமன்றத்தில் எடுக்கப்படவிருக்கையில் இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் திங்களன்று செம்மணி விவகாரம் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் -

இது குறித்துத் தாம் இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை நடத்தும் யாழ். மேலதிக நீதிவானுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும்-

சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசாரணைகள் பிற்போடப்பட்டால் செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் பணிக்காக மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் தாமதம் அடையலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-6-7)

## யுத்தத்தை நிறுத்துமாறு அரசுக்கு உலக வங்கி அழுத்தம் தரவேண்டும்

### வடபகுதிக் கல்விமான்கள், பிரமுகர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.20

தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு...ந்து சமாதானத்தை உருவாக்குமாறு இலங்கை அரசுக்கு உலக வங்கி அழுத்தம் கொடுக்க வேண்டும்.

உலக வங்கியிடம் இத்தகைய கோரிக்கையை விடுக்குமாறு வடபகுதிக் கல்விமான்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத்திடம் வேண்டியுள்ளனர்.

குடாநாட்டின் அபிவிருத்தி, புனரமைப்புப் பணிகள் தொடர்பாக உலக வங்கிக்கு திட்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக யாழ்.பஸ்ரியன் ஹோட்டலில் நேற்று நடந்த கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.விக்கினேஸ்வரன் தலைமையில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் உலக வங்கி திட்ட அறிக்கையில் சேர்ப்பதற்கான சில ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆலோசனைகளில் சில வருமாறு :-

* உலக வங்கி இலங்கைக்கு நிதியுதவி வழங்கிவருகின்றது. யுத்தத்தை நிறுத்தி சமாதானம் ஏற்பட்டால்தான் உதவி வழங்குவோம் என உலக வங்கி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

* கொழும்புக்கும் குடாநாட்டுக்கும் இடையில் சீரான போக்குவரத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய எம்.பி பதவியேற்பு

கொழும்பு,ஜன.20

ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டிருந்த தொண்டமான் காலமானதை அடுத்து, அந்த இடத்துக்கு ஐ.தே.கட்சியினால் புதிதாக நியமிக்கப்பட்ட புத்திரசிகாமணி நேற்றுக் காலை சபாநாயகர் கே.பி.இரத்தினாயக்க முன்னிலையில் எம்.பியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (உ)

### 4ஊழியர்கள் கைது!

கொழும்பு,ஜன.20

சில தினங்களுக்கு முன்னர் புதிய டயறி என்ற பெயரில் வெடிகுண்டு ஒன்று ஜனாதிபதி செயலகத்துக்குத் தபாலில் அனுப்பப்பட்டது தொடர்பாக மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தைச்சேர்ந்த நான்கு ஊழியர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வெடிகுண்டு கொண்ட உறை, தபால் முத்திரையின் மீதான சீல் செய்யப்படாமல் மத்திய தபால் நிலையத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### அரச அணியின் கூட்டம் இன்று

கொழும்பு,ஜன.20

அரசமைப்பைத் திருத்துவது தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள - பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய - குழுவின் முதலாவது கூட்டம் இன்று காலை 7.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. (உ-3)

### சிப்பாய் கைது

வவுனியா,ஜன.20

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இராணுவ டிரக் மோதி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக வேப்பங்குளம் இராணுவ முகாமைச் சேர்ந்த டிரக் சாரதியான சிப்பாய் ஒருவர் நேற்றுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பிரியந்த ரட்ணாயக்க (வயது 24) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு வவுனியா பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (உ-7-164)

### ஊர்காவலர் சுட்டுக்கொலை

கல்முனை பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மரைக்கார் முகமட் ஜவ்பார் (வயது 24) என்ற ஊர்காவலர் நேற்றுமுன்தினம் இரவு பிஸ்டல் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்லாமாபாத் என்ற இடத்தில் இருந்து நற்பிட்டிமுனைக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாமில் சூடு!

வவுனியா - சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அங்கு காவலில் நின்ற குமார் என்ற உறுப்பினர் உயிரிழந்தார்.

அவரிடமிருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (உ-7-164)

### செய்தியாளர்கள் யாழ். வருகை

சுமார் நாற்பது பேரைக் கொண்ட கொழும்பு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர் குழு நேற்று யாழ். வந்தது. இக்குழுவில் ஒரு பகுதியினர் நேற்று ஆனையிறவுப் பகுதிக்குச் சென்றனர். ஏனையோர் யாழ் நகரைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராஜா தியாகராஜா

(கான இசைமணி, நாதஸ்வர மேதை)

தேவரையாளி செல்வபதியைப் பிறப்பிடமாகக் கொண்ட, தம்பிராஜா தியாகராஜா (கானஇசைமணி, நாதஸ்வர மேதை) 18-01-2000 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சந்திராவின் அன்புக்கணவரும் கணேஷன், தியாகமலர், சசிகலா, தியாககணேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராஜாவின் (டென்மார்க்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19-1-2000) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இசை இல்லம்,
தேவரையாளி.

(சி/10710)

## திருமதி செல்லத்துரை சரஸ்வதி

கருகம்பானையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை சரஸ்வதி 18-01-2000 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் — குஞ்சாரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் ஆறுப்பிள்ளை செல்லத்துரையின் அன்பு மனைவியும் தெய்வநாயகி (சுன்னாகம்), காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கதிர்காமத்தம்பி (C. T, B) சிவசண்முகநாதன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் Greenlays Bank), திருஞானசம்பந்தமூர்த்தி (சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குமுதினி, சுயோதினி, நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விநாயகமூர்த்தி, இரட்ணராசா, இளங்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனுஜா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-01-2000 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெய்வநாயகி
(சகோதரி — சுன்னாகம்)
செல்வலட்சுமி தனநாயகம்
(பெறாமகள்)
(மக்கள் வங்கி, சுன்னாகம்)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(72870)

## திருமதி இராசா மகேஸ்வரி

திருமதி இ. மகேஸ்வரி அவர்கள் காலமானார்

இவர் காலஞ்சென்ற விசாகப்பெருமாள் — இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசா (பிரசித்த நொத்தாரிஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரன் (ஆசிரியர்), நாகேஸ்வரி (சுகாதாரத்திணைக்களம், கொழும்பு), கௌசலை (ஆசிரியர், இசுபத்தன ம. வித்தியாலயம் கொழும்பு), அரசகுலசூரியன் (ஆசிரியர், கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்), இராமலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவபாக்கியம் அவர்களின் அன்புச் சகோதரியும், தவேந்திரன் (கொழும்பு), சோமஸ்கந்தன் (கொழும்பு). ஜானகி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனனி, அபர்ணா கபிலன், அமலன், ஆதித்தன், அகிலன், மயூரன், மதுமிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (20 - 01 - 2000) வியாழன் பிற்பகல் 4 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. அரசகுலசூரியன்
(மகன்)

70, செம்மணி றோட்,
நாயன்மார்கட்டு.

(72876)

## திருமதி சபாபதிப்பிள்ளை தங்கம்மா

சங்கானை காளிகோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட சபாபதிப்பிள்ளை தங்கம்மா 19-01-2000 புதன்கிழமையன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்லத்துரை (மலேசியா), நவரத்தினம் (சிங்கப்பூர்), செல்வராசா, (வவுனியா), துரைராசா (விசுவமடு), இரங்கநாதன் (சங்கானை). கனகலட்சுமி, கனகாம்பிகை, இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [20 - 01 - 2000], வியாழன் நண்பகல் 12. 00 மணியளவில் விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
ச. இரங்கநாதன்
[மகன்]

காளி கோயிலடி,
சங்கானை.

[72868]

## சுவீடன் குழு யாழ். விஜயம்

இலங்கையிலுள்ள சுவிடிஸ் தூதரகத்தில் கடமையாற்றும் மூன்று அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது. இக்குழு சில தினங்கள் இங்கு தங்கியிருந்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ளும். (உ-5)

A/L Day Class

Com Mr. பகில்
Acc. Mr. Rajani
St. Mr. தவசேகர்
Ec. Mr. இராஜேஸ்

கலைப் பிரிவுக்கும்

SHAM ROCK

[சி/10713]

விக்னா
கல்வி நிறுவனம்

அளவையியல்
திரு. சயந்தன்
2001
வெண் வரைப்படம்
சனி, ஞாயிறு 11 — 12
2002
அளவையியலும்
வரலாறும்
2000
நிகழ்தகவு
2000 Day Class
வினாவிடை வகுப்பு
சனி. ஞாயிறு 2 — 3

[72864]

தூசி மினி
(ஆவரங்கால்)
விஜயகாந்த் (இருவேடம்)
பிரபுதேவா, மீனா
நடிப்பில்
ஷண்ணின்
வானத்தை போல
9. 30, 12. 30, 2. 30

(72886)

சிந்து திரை அரங்கம்
(உரும்பிராய் சந்தி)
விஜயகாந்த் (இருவேடம்)
பிரபுதேவா, மீனா
நடிப்பில்
ஷண்ணின்
வானத்தை போல
10. 30 - 3. 30

(72887)

நாகம்ஸ்
சுன்னாகம்
சுன்னாகம் லயன்ஸ்கிளப் நிதிக்காக
ரஜனி. சிவாஜி,
ரம்யாகிருஷ்ணன்
நடித்த
படையப்பா
(ரீல்ஸ் அல்ல)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)

[72881]

லிபேட்டி அச்சுவேலி
கார்த்திக், ராதா
நடித்த
அலைகள் ஓய்வதில்லை
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678

[72730]

## வாழ்த்துகின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளராகச் சேவையாற்றி
18-01-2000 முதல்
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

கௌரவ வேலும்மயிலும் குகேந்திரன்
(வி. கே. ஜெகன்)

அவர்களுக்கும்

சின்னையா தவராசா

அவர்களுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

தவிசாளர்,
உறுப்பினர்கள், ஊழியர்கள்.

வ. லி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.

(சி/10714)

சுனில் ஆட்ஸ்

Photo Chrome · Photo Friends · Senkada

நீங்கள் விரும்பும் COLOUR LAB இல் கழுவிப் பெற்றுக் கொள்ளலாம்.

★ 10 - 1 - 2000 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கலர் படச் சுருள்களுக்கான படங்கள் வந்துவிட்டன.

★ 22 - 1 - 2000 அன்று படச் சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10718)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 14- 01- 2000 அன்று படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை

நகரசபைத் தலைவர் வடிவேலு விஜயரட்ணம்

அவர்களுக்கும்

சபையின் ஊழியர் முதலி பகீரதன்

அவர்களுக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் சபையினருக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

தலைவர், உபதலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள், ஊழியர்கள்.
வல்வெட்டித்துறை நகரசபை,
வல்வெட்டித்துறை.

(சி/10717)

# மரண அறிவித்தல்

## திருமதி சோதியம்மா விநாயகமூர்த்தி ஐயர்

(நாயன்மார்கட்டு)

வெய்யிலுகந்த விநாயகர் ஆலய பரிபாலகர் விநாயகமூர்த்திஐயர் அவர்களின் அன்புப்பத்தினியார் சோதியம்மா 19-01-2000 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற சோதிநாதன், முருகானந்தம் (பிரான்ஸ்), சறோஜினிதேவி, சண்முகானந்தம் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கெங்காதேவி, கலாதேவி, திருஞானசம்பந்தர் (புங்குடுதீவு ம. வி.), சுந்தரேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் கணேசநாதன் (மாநகர சபை), திருமதி சாந்திமதி ஸ்ரீ காந்தன் (U. K.), பிரதீபன், ஜெனனி, அபிராமி, சந்தோஷ்காந், வளர்மதி, சசிகாந், சியாம்காந் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20-01-2000) காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. விநாயகமூர்த்தி ஐயர்
(கணவர்)

162, வெய்யிலுகந்த பிள்ளையார்
கோயிலடி.

(72883)

### சுன்னாகம் பகுதியில்

# பாவனைக்கு உதவாத பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன

வலிகாமம் தெற்கு, ஜன. 20

பொங்கல் தினத்தின் தேவைக்கென வியாபார நிறுவனங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத பயறு, கடலை போன்றன சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர்ப் பரிசோதனையின் போது சிக்கிக் கொண்டன.

சுன்னாகம் நகரப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்களில் கடந்த வெள்ளியன்று திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்ட சுகாதார பரிசோதகர்கள் இப் பொருள்களைக் கைப்பற்றி அழித்தனர்.

யாழ்ப்பாணம் உணவுப் பொருள் பரிசோதகரும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியுமாகிய எஸ். மகாதேவன் தலைமையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஐந்து சுகாதார பரிசோதகர்கள் கூட்டாக இப்பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இந்தப் பரிசோதனைகளின் போது பாவனைக்கு உதவாத பிஸ்கெட் வகைகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், சோயாமீற் என்பனவும் வண்டு பிடித்த நிலையில் பயறு, கடலை போன்ற பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்பொருள்கள் யாவற்றையும் உடனடியாகவே அழித்த சுகாதாரப் பரிசோதகர்கள் இது போன்ற பொருள்களை எதிர்காலத்தில் விற்பனை செய்ய வேண்டாம் எனவும், அவ்வாறு விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர். (இ-152)

## மானிப்பாயில் திருட்டு அதிகரிப்பு

வலிகாமம், தெற்கு. ஜன.20

மானிப்பாய்நகர்ப் புறத்தை அண்டிய பகுதிகளில் இரவு நேரக் களவுகள் அண்மையில் அதிகரித்துள்ளன.

கடந்த சில நாள்களில் கடைகள், வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டு வருகின்றன. ஊரடங்குச் சட்டத்தை சாதகமாக்கிக் கொண்டு மின்சாரவெட்டு இடம்பெறும் நேரங்கள் பார்த்து திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

மானிப்பாய் மத்திய பொதுச் சந்தையின் உட்புறம் அமைந்துள்ள கடை ஒன்றின் மேற்கூரைகளைக் கழற்றி உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த சவர்க்கார வகைகள், பால்மா வகைகள், பவுடர்கள், அழகுசாதனப் பொருள்கள் என சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை கடந்த வாரம் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தக் களவு சம்பந்தமாக கடை உரிமையாளர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தின் முன்புறமாக உள்ள உணவுச் சாலை ஒன்றுக்குள் பின்புறத்தினால் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த எண்ணாயிரம் ரூபா பெறுமதியுடைய ரேப்றெக்கோடரை எடுத்துச் சென்றுள்ளனர்.

மேலும், அந்தோனியார் ஆலயத்துக்குச் சொந்தமான ஆலயத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஆள்கள் இல்லாத ஒரு வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் போன்றவற்றையும் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். (இ-152)

## புலமைப்பரிசில் மேலும் அறுவருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 20

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் செயற்படுத்தப்பட்டு வரும் புலமைப் பரிசில் திட்டத்தில் இந்த ஆண்டில் ஆறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இத்திட்டத்தில் அரியாலைப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான கல்வி உபகரணங்களும் பின்னூட்டல் பயிற்சி வகுப்புகளும் மேற்படி சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு —

செல்வரட்ணம் சர்மிலன், தவராசா சயந்தன், செல்விகள் வினோதா திருஞானசம்பந்தன், டெலிஸ்ரா கமலநாதன், மனோப்பிரியா முத்துலிங்கம், அஜித்தா சிங்கராஜா.

கடந்த மூன்று வருடங்களாக இத்திட்டத்தினை அரியாலை அபிவிருத்திச் சங்கம் செயற்படுத்தி வருகிறது. (இ-5)

## அதிபர் சேவை பதவி உயர்வு நேர்முகப்பரீட்சை பெப்.12 இல்

யாழ்ப்பாணம், ஜன. 20

தரம் மூன்றில் இருந்து தரம் இரண்டுக்கு அதிபர்களைப் பதவி உயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை பெப்ரவரி 12 ஆம்திகதிமீண்டும்கொழும்பில் நடைபெற உள்ளது.

கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இந்த நேர்முகப் பரீட்சைக்கு குடாநாட்டில் இருந்து அதிபர்கள் கலந்து கொள்ள முடியாமற் போனதால் இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தரம் இரண்டில் இருந்து தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 29 ஆம் திகதி கல்விச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற உள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை அதிபர் சேவை தரம் மூன்றில் இருந்து தரம் இரண்டுக்கு பதவி உயர்வு செய்வதற்கு 1989 ஆம் ஆண்டும் அதற்கு முன்பும் தெரிவு செய்யப்பட்டவர்களும் தரம் இரண்டில் இருந்து தரம் ஒன்றுக்கு பதவி உயர்வு செய்வதற்கு 1989 ஆம் ஆண்டுக்கு முன்பு தெரிவு செய்யப்பட்டவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

1991 ஆம் ஆண்டில் அதிபர் சேவை மூன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கிடைக்காதவர்கள் கிடைத்தவர்களின் விண்ணப்பத்தை பிரதி செய்து விவரங்களைப் பூர்த்தி செய்த பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன்நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10-118)

## சாவகச்சேரி வழமை நிலைக்கு

தென்மராட்சி, ஜன. 20

சாவகச்சேரி நகரப் பகுதியில் நிலவிய பதற்றம் தணிந்து மீண்டும் வழமை நிலைமை ஏற்பட்டுள்ளது. சந்தை நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் திறந்து செயல்படுகின்றன.

கடந்த ஒரு வாரமாக இப்பகுதியில் ஷெல்வீச்சு இடம்பெறாததால் வர்த்தகர்கள் தமது கடைகளை பழைய நிலைக்கு கொண்டுவந்துள்ளனர்.

ஷெல்வீச்சுக் காரணமாக் இடம்பெயர்ந்து மீசாலை, மட்டுவில் ஆகிய இடங்களில் வியாபாரம் மேற்கொண்ட சந்தை வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் பெருமளவில் சாவகச்சேரி சந்தைக்கு மீண்டும் வருவதால் சந்தை கலகலப்பாகக் காணப்படுகிறது

திலகம், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, கிளாலி போன்ற இடங்களிலிருந்து பெருமளவு மீன் சந்தைக்கு வருவதைக் காணமுடிகிறது. (இ-117)

## ராஜாஜியைக் கவர்ந்த சு. வேயின் உருவகக் கதை 'மணற்கோயில்'

### வெளியீட்டு விழாவில் தகவல்

நல்லூர், ஜன. 20

உயர்ந்த கருத்துக்களை வாசகர்கள் பற்றிப் பிடிக்கக் கூடியதாக ''மணற்கோயில்'' நூல் எழுதப்பட்டுள்ளது. இது மணற்கோயில் என்றாலும் ஒரு சொற்கோயில், பொற்கோயில் என்பது உண்மை.

இவ்வாறு சு. வே. எழுதிய ''மணற்கோயில்'' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் பேசிய 'சிற்பி' சிவ சரவணபவன் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி சு. குணராசா தலைமையில் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இவ்வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

''சிற்பி'' அவர்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது:

''மணற்கோயில்'' என்ற கதை முதலில் ''கலைச் சோலை'' பத்திரிகையில் வெளியானது. மூதறிஞர் ராஜாஜி இந்த உருவகக் கதையைப் படித்துவிட்டு கல்கி இதழில் பணியாற்றிய சோமசுந்தரம் என்பவரிடம் நான் சமீபத்தில் வாசித்த உருவகக் கதைகளில் மிகவும் சிறந்த கதையாக வந்துள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார். கலைப் படைப்புக்கள் நேரடியாக உணர்ந்து அனுபவிக்கப்பட வேண்டியவை. உருவகக் கதை என்றால் என்ன என்பதை தனது ''கபாடந்திறமினோ'' என்ற முன்னுரையில் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஒரு சொல்லை நீக்கி அதற்குப் பதிலாக வேறு ஒரு சொல்லைப் போட்டிருக்கலாம் என்ற கருத்துக் கிளம்பாத வாறு தெரிந்தெடுத்த சொற்களைப் பயன்படுத்தித் தனது கதைகளைக் கொண்டு செல்லும் பாங்கு சு. வே. அவர்களுக்கே உரியது. பலர் சொல்லத் தயங்கும் விடயங்கள் இதில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன — என்றார்.

கலாநிதி சு. குணராசா தமது தலைமையுரையில் கூறியதாவது:

1939 ஆம் ஆண்டில் இருந்து ''ஈழகேசரி'' பண்ணையில் வளர்ந்தவர் என்பதால் சு. வே. ஈழத்து முன்னோடி எழுத்தாளர் என்ற பற்று தமிழ் மக்களுக்கு அவரிடம் உண்டு. இன்று வெளியிடப்படும் சிறுகதை குறியீட்டு அடிப்படையில் வருகிறது. பண்டிதமணி கணபதிப்பிள்ளைதான் குறியீட்டுக் கதைக்கு மூலகர்த்தா. 'ஈழகேசரி' பத்திரிகை பண்டிதமணி போன்றவர்களின் நவீன சிந்தனைகளைக் கொண்ட கதைகளை வெளியிட்டது. சு. வே. அவற்றில் 14 சிறுகதைகளை எழுதியுள்ளார். எமது இருப்பின் ஆரோக்கியத்தை வெளிப்படுத்தக் கூடியதாக அவற்றை மீண்டும் வெளியிட வேண்டும். இளம் எழுத்தாளர்களின் ஆற்றலை வளர்க்க இது அவசியம் — என்றார்.

எழுத்தாளர் செம்பியன் செல்வன் தமது உரையில் தெரிவித்ததாவது:

இன்றைய சமூகத்தில் நாங்கள் நினைத்ததை உள்ளபடி எழுத முடிகிறதா? கலைஞனுடைய ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தும் ஒரு கலை வடிவமே உருவகம். உருவகக் கதையை எல்லோராலும் எழுத முடியாது. தான் வாழும் பிரதேசம், அரசியல், சமூக பண்பாட்டு வேர்களை எடுத்துக் கூறும் இக்கதை மூலம் அவரது படைப்பாற்றல் பலம் தெரிகிறது. மொழி நடை, கவிதைத்தன்மை என்பனவற்றைச் செம்மையாகக் காண முடிகிறது. இந்த நூலை வெளியிட்டது அவருக்குப் பெருமை சேர்க்கிறது — என்றார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சிவலிங்கராசா பேசும் போது கூறியதாவது;-

நான் சிறுவனாக இருந்த போது ''கலைச் செல்வி''யில் வெளியான மணற்கோயில் கதையைப் படித்தேன். அது என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறந்த உருவகக் கதையை இவர் தான் சொல்ல முடியும் என்று எண்ணத் தோன்றும் அளவுக்குஉவமை, உருவகம் என்பன கூறப்பட்டுள்ளன. பண்டிதமணி பாரம்பரியத்தில் வந்தவர் என்பதாலோ என்னவோ எல்லா இடத்திலும் இறுக்கம் தெரிகிறது. சொற்கள் கவிதை தரும், சுகத்தைத் தருகின்றன.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, நூலாசிரியர் சு. வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

'சிற்பி' சிவசரவணபவனிடம் இருந்து நூலின் முதல் பிரதியை எஸ். சந்திரபோஸ் பெற்றுக்கொண்டார். [அ-103]


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 09 — 1975

உதிர்வு: 31 — 01 — 1999

## அமரர் தில்லைநடராஜா -ரமணன்

(வடக்கு கிழக்கு மாகாணசபை உதவி நூலகர்)

திதி: 20 - 01 - 2000

ஆண்டொன்றானதுவோ ஐயகோ! நீ எமைப் பிரிந்து
அன்பான கண்மணியே! எமை விட்டேன் சென்றாய்
மீண்டு நீ வந்திடையா உறவுகளைப் பார்த்திடவே!
மனக்கோட்டை எல்லாமே மண்கோட்டை
ஆனதையா!

பள்ளிப் படிப்பில் அக்கறை கொண்டு பெரும் புகழும்
பெற்றாய்
காலன் வந்தபோது உன் கல்வியினை எங்கு விட்டாய்
பெண் என்னும் பேய் உருவில் காலன் வந்தானோ?
நாம் தவிக்கின்றோம் உன்னை எங்கு இனிக்
காண்போம் ஐயா!

உறவுகள் இங்கிருக்க உற்ற நண்பர் இங்கிருக்க
உன் நிலைமை சொல்லாமல் கனதூரம்
போனதேனோ?
இறக்கைக்குள் பொத்தி வைத்து பொன் மணியாய்
காத்தோமே!
ஒரு வார்த்தை மொழிந்திடாமல் எமைவிட்டு
ஏன் சென்றாய்?

ஐயா உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

அம்மா, சின்னம்மா,
சகோதரன் இராகுலன்,
சகோதரிகள்: தயாளினி, தாட்சாயினி,
உற்ற நண்பர்கள்.

பாரதி வீதி,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (72854)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி அன்னலட்சுமி இராசையா

தோற்றம்; 03-03-1931 மறைவு: 03-02-1996

திதி 20-01-2000 (தை பௌர்ணமி)

ஆண்டுகள் நான்கு கனவுபோல ஓடி மறைந்து விட்டன தாயே!
ஆயினும் உங்களின் மறைவு அன்றுபோலவே
இன்றும் எம்மை வாட்டுகின்றதே.
உங்களின் நினைவுகளைப் பசுமையாகப் பேணி,
சிவன் அடியில் உங்கள் ஆத்மா சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

மாத்திரா வளவு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை. (சி/10685)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நாகம்மா சின்னையா

மலர்வு: 02-03-1913 உதிர்வு: 11-02-1998

திதி:- தைப் பூரணை

அன்பின் தீபமே! அணையாத ஒளி விளக்கே!
ஆண்டு இரண்டென்ன
ஆயிரம் தான் ஆனாலும்
அம்மா! உங்கள் அன்பு முகம்
நினைவு எம்மை விட்டு அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தன் அருள் வேண்டி கைகூப்பி நிற்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.**

ஒழுவில் றோட்,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (72830)

## திருக்குறள் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 20

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே 'திருக்குறள்' சம்பந்தமாக கட்டுரை மனனப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ளபோட்டிகள் குறித்த விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலயமட்டம் என்ற ரீதியில் நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கப்படும் எனவும்—

வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ—7)

## சாயிபாபா உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 20

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் மிகப்பெரிய அளவிலான திருவுருவப்படம் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்குத் திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் உள்ள 'ஞானியர் மண்டபத்தில்' திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முன்னர் திருவுருவப்படம் திருநெல்வேலி கிழக்கு — செங்குந்த வீதியில் உள்ள 'அருணோதயம்' இல்லத்தில் இருந்து நகரசங்கீர்த்தனை மற்றும் வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் (ஐ—7)

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 20

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாவும் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்களும் பரீட்சை நிலையத்துக்கு சமூகமளித்து தற்காலிக அனுமதிக் கடிதத்துடன் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும்—

வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-7)

## பாலர் பாடசாலை ஆரம்ப விழா

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். வில்லூன்றி தேவஸ்தானத்தினால் அமைக்கப்பட்டுள்ள பாலர் பாடசாலையின் ஆரம்ப விழா இன்று வியாழன் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பாலர் பாடசாலையைத் திறந்து வைப்பார். (ஐ-7)

## உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 20

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணியாற்றும் 12 ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் ஆசிரியர்களின் சுயவிருப்புகள் கருதி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

# கண்ணீர் அஞ்சலி

பளைப் பிரதேச செயலர் பணிமனையின்
அரசர்கேணி கிராம உத்தியோகத்தர்
**சி. வல்லிபுரம்**
அவர்களின் தந்தையாரும்
பளைப் பிரதேச செயலக பிரதம லிகிதர்
**தா. சயந்தினி**
அவர்களின் பேரனுமாகிய

## நாகமுத்து சின்னத்தம்பி

அவர்கள் 14—01—2000 ஆம் திகதி காலமாகிய செய்தி கேட்டு அவரது குடும்பத்தினரின் துயரத்தில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பளைப் பிரதேச செயலர், பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிராம உத்தியோகத்தர்கள்.**

(72845)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 — 12 — 1936



மறைவு: 22 — 01 — 1997

## அமரர் செல்லர் ஆறுமுகதாஸ்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி.

**மனைவி, பிள்ளைகள்.**

திருக்கேதீஸ்வரி இல்லம்,
இணுவில் தெற்கு. (72808)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 27 — 07 — 1911



மறைவு: 21 — 12 — 1999

## திருமதி மனோன்மணி தர்மலிங்கம்

( ஆச்சியம்மா )

அன்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்தே
ஆருயிர் பாசமும் பொழிந்தே
இனிதே என்றுமாய் மலர்ந்தே
புனிதமான உங்களின் வாழ்வுமே
நித்தம் நாங்கள் நினைத்துமே
உலகம் உள்ளவரை மறவோமே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

89, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (72828)

# குறொஸ்னியின் மத்திய பிரதேசம் ரஷ்யப்படைகள் வசம் என அறிவிப்பு

## எந்நேரத்திலும் நகர் கட்டுப்பாட்டில் வரலாம்

குறொஸ்னி, ஜன. 20

செச்சினியாவின் தலைநகர் குறொஸ்னியின் மத்திய பகுதியை ரஷ்யப் படைகள் கைப்பற்றிவிட்டன. எந்தநேரமும் அந்த நகர் அவர்களின் கட்டுப்பாட்டில் வரும் என்று பி.பி.ஸி தெரிவித்தது.

செச்சினியாவின் எல்லைப் பகுதியில் தங்கியுள்ள பி.பி.ஸி. செய்தியாளரின் தகவலை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. மேற்கண்டவாறு தெரிவித்தது.

பொது மக்களின் நன்மை கருதி செச்சினியா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று கடந்த திங்கட்கிழமை ஐரோப்பிய நாடுகளின் கவுன்ஸில் கோரிக்கை விடுத்த சிலமணி நேரத்தில் ரஷ்யப் படைகள் குறொஸ்னி மீதான தாக்குதலை ஆரம்பித்தன என்றும் —

மூன்று முனைகளில் முன்னேறிய ரஷ்யப் படைகள் குறொஸ்னி நகரின் மத்திய பகுதியைக் கைப்பற்றிவிட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஏனைய இரு முனைகளிலும் தொடர்ந்து உக்கிர சண்டை நடக்கிறது என்றும்—

எந்த நேரத்திலும் குறொஸ்னியை ரஷ்யப் படைகள் கைப்பற்றும் என்றும் – பி.பி.ஸி. தெரிவித்தது.

பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள குறொஸ்னி நகரை ரஷ்யப் படைகள் கைபற்றினாலும் —

அந்த நகரைப் புனரமைக்க பெரும்பணச் செலவை அந்த நாடு செலவிட வேண்டிவரும் என்றும் —

ரஷ்யா தற்போதுள்ள பொருளாதார நிலையில் அது உடனடியாகச் சாத்தியப்படாது என்றும் — பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

(இ–3)

உலக அரங்கில்

## சுற்றுலாப் பயணிகள் கடத்தப்பட்டனர்.

பாரிஸ், ஜன. 20

ஜேர்மனியில் சுற்றுலா மேற்கொண்டிருந்த பிரெஞ்சு பிரஜைகள் இருவரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

தலைநகரில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நகர் ஒன்றில் வைத்து கணவன் – மனைவியான அவர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் இரு ஜேர்மனியர்களும் கடத்தப்பட்டுள்ளனர்.

(இ–க–3)

## 'போலர் லான்டர்' விண்கலம்; தேடும் பணி கைவிடப்பட்டது

வாஷிங்ரன், ஜன. 20

பலகோடி ரூபா செலவில் செவ்வாய்க் கிரகத்துக்கு 1998 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட ''போலர் லான்டர்'' என்ற விண்கலத்தைத் தேடும் பணி கைவிடப்பட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான ''நாஸா'' நேற்று அறிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் செவ்வாய்க் கிரகத்துக்கு இந்த விண்கலம் அனுப்பப்பட்டிருந்தது. திட்டமிட்டபடி கடந்த மாதம் இது செவ்வாய்க் கிரகத்தில் இறங்கவில்லை. அத்துடன் அதனுடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒரு மாத காலமாக அந்த விண்கலத்தைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் —

அந்த முயற்சி பயன் அளிக்காத காரணத்தால் அது கைவிடப்பட்டு விட்டதாகவும் — நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்கலம் பதினொரு மாத காலத்தில் 75 கோடியே 70 லட்சம் கிலோ மீற்றர் தூரத்துக்குப் பயணம் செய்தது என்று ''நாஸா'' தெரிவித்துள்ளது.

(இ–க–3)

# யுத்தம் மூண்டால் அணு ஆயுதங்களை பயன்படுத்தத் தயங்கமாட்டேன்

## பாகிஸ்தான் ஆட்சியாளர் முஷாரப் சூளுரை!

இஸ்லாமாபாத், ஜன. 20

நாட்டுக்கு எதிராக யுத்தம் மூழும்பட்சத்தில் நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டின் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவும் பின் நிற்கமாட்டோம் என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்.

சினாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது சி.என்.என். தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே இப்படி அவர் கூறியுள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டுக்கு எதிராக யுத்தம் ஒன்று ஏற்படும்பட்சத்தில் நாட்டைப் பாதுகாக்கவும், நாட்டின் ஒற்றுமைப்பாட்டை நிலைநிறுத்தவும் அணு ஆயுதத்தைப் பாவிக்கவும் பின் நிற்கமாட்டோம்.

காஷ்மீர் பிரச்சினையை அமைதியாகத் தீர்க்குமாறு சீன அதிகாரிகள் என்னிடம் வற்புறுத்தினர். அமைதியான வழியில் தீர்க்கவே நாம் விரும்புகிறோம்.

தற்சமயம் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. எடுத்ததெற்கெல்லாம் எமக்கு எதிராக இந்தியா ஓலமிடுகின்றது — என்றார்.

(இ–க–3)

## கடந்த ஆண்டின் சிறந்த நடிகை

புதுடில்லி, ஜன. 20

இந்தியாவின் கடந்த ஆண்டுக்கான சிறந்த நடிகையாக உலக அழகியான ஐஸ்வர்யா ராய் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்திய சினிமா பார்ப்போர் சங்கம் இந்தத் தெரிவைச் செய்துள்ளது

சிறந்த நடிகராக சஞ்ஜய் தத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(இ–க–3)

## கார்கில் யுத்தம்பற்றிய அறிக்கை உடன் வெளியிடப்பட வேண்டும்

### சோனியா பகிரங்கக் கோரிக்கை

புதுடில்லி, ஜன. 20

இந்திய — பாகிஸ்தான் படைகளுக்கு இடையே கார்கிலில் நடந்த யுத்தம் தொடர்பான விசாரணை அறிக்கையை உடன் வெளியிடவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரதமர் வாஜ்பாயிடம் கோரியுள்ளார்.

இந்த யுத்தம் தொடர்பாக முன்னாள் இராணுவ ஆலோசகர் சுப்பிரமணியம் தலைமையிலான குழு மேற்கொண்ட விசாரணை தொடர்பான அறிக்கை கடந்தவாரம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு இந்த அறிக்கையைப் பகிரங்கமாக வெளியிடவேண்டாம் என்று அந்தக்குழு சிபார்சு செய்திருந்தது.

ஆனால், இந்த அறிக்கையை வெளியிடுமாறு சோனியா பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார். (இ–க–3)

## ரஷ்ய நீதிமன்றில் குண்டு வெடிப்பு

மொஸ்கோ, ஜன. 20

ரஷ்யாவில் செச்சினிய எல்லைப் பகுதியில் அமைந்துள்ள உயர் நீதிமன்றக் கட்டடத்துக்குள் நேற்று முன்தினம் குண்டு ஒன்று வெடித்ததால் கட்டடம் பலத்த சேதம் அடைந்தது.

நீதிமன்றத்துக்குள் பலர் அச்சமயம் இருந்த போதும் உயிர்ச்சேதங்கள் குறித்துத் தகவல் எதும் வெளியாகவில்லை. (இ–க–3)

## இந்தியத் துறைமுக ஊழியர்கள் திங்கள் முதல் வேலை நிறுத்தம்

புதுடில்லி, ஜன. 20

இந்தியாவின் முக்கியமான பதினாறு துறைமுகங்களின் ஊழியர்கள் ஒரு லட்சம் பேர் சம்பள உயர்வு கோரி கடந்த திங்கள் நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பாக மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜ்ராம்சிங்குடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வி அடைந்துள்ளதை அடுத்து தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதாக ஊழியர்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தவேலை நிறுத்தத்தால் இந்தியாவின் முக்கிய துறைமுகங்களின் பணிகள் அனைத்தும் ஸ்தம்பித்துப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகங்களில் நிலைமைகளைச் சமாளிப்பதற்கான அவசர நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய தரைவழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ராஜ்ராம்சிங் தெரிவித்தார்.

## இஸ்ரேல் பிரதமருடன் அரபாத் திடீரெனச் சந்தித்துப் பேச்சு

### நான்கு மணிநேரம் கலந்துரையாடினர்

ஜெருசலம், ஜன. 20

வாஷிங்ரனில் நேற்று ஆரம்பமாக இருந்த இஸ்ரேல் — சிரிய சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட நேரத்தில் —

இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக்குக்கும் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்துக்கும் இடையில் திடீர்ப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளன.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரைப் பிரதேசத்தில் மேலும் ஆறுசதவீதத்தைப் பலஸ்தீனத்திடம் கையளிப்பது தொடர்பாக இரு தலைவர்களும் நான்கு மணி நேரம் பேச்சு நடத்தினர் என்றும் —

இந்தப் பிரதேசத்தைக் கையளிக்கும் கால எல்லையை மேலும் மூன்று வாரத்துக்குப் பிற்போடுவது என்று இணக்கம் காணப்பட்டது என்றும் — இஸ்ரேல் தரப்புச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

இரு தலைவர்களுக்கும் இடையில் சிநேகபூர்வமாகப் பேச்சுக்கள் இடம்பெற்றதாகப் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ–க–3)

# பொம்மை வெடிகுண்டுகள் மூலம் இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டம்

புதுடில்லி, ஜன. 20

இந்தியாவில் பொம்மை வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல்களை நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொம்மை வெடிகுண்டுகளுடன் டில்லியில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் தீவிரவாதி ஒருவர் மூலம் இந்தத் திட்டம் தெரியவந்துள்ளதாகவும் —

திரிபுரா, மணிப்பூர், சிக்கிம் ஆகிய மாநிலங்களில் தாக்குதல்களை நடத்திவரும் இந்தத் தீவிரவாதிகள் டில்லியில் தாக்குதல்களை மேற்கொள்ள வந்த சமயம் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் —

பொம்மைகளுக்குள் மறைத்து எடுத்து வரப்பட்ட ஆர்.டி.எக்ஸ். என்ற வெடிமருந்துகளும், குண்டை வெடிக்க வைக்கும் எலக்ரோனிக் கருவிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் — இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(க–3)

## நாட்டை விட்டு வெளியேறுமாறு தூதரக அதிகாரிக்கு உத்தரவு

இஸ்லாமாபாத் ஜன. 20

பாகிஸ்தான் உளவுப் பிரிவினால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட இந்தியத் தூதரக அதிகாரி போஸ்ஸை ஒரு வார காலத்துக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

தொலைவில் இருந்து தாக்கக்கூடிய வல்லமை பொருந்திய குண்டுகளை அவர் வைத்திருந்தார் என்றுகூறிக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரைப் பலத்த துன்புறுத்தலுக்குப் பின்னர் பாகிஸ்தான் உளவுப்பிரிவினர் விடுவித்திருந்தனர்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத் தூதுவரை வெளியுறவு அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்த பாகிஸ்தான் அதிகாரிகள், பிரஸ்தாப அதிகாரியான போஸ்ஸை ஒரு வாரத்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளனர். (இ–க–3)

## இந்திய வெளியுறவு அமைச்சரின் இஸ்ரேலுக்கான விஜயம் ரத்து

புதுடில்லி, ஜன. 20

இந்திய வெளியுறவுத்துணை அமைச்சர் ஜஸ்வந்சிங்கின் இஸ்ரேலிய விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இன்று வியாழக்கிழமை அவர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்வது என முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலையை அடுத்து ஜஸ்வந்சிங்கின் இஸ்ரேல் விஜயம் பற்றி மீண்டும் புதிதாக திட்டமிடப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

பயணத்துக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## பூசை இன்றி ஆலயங்கள்

கொழும்புத்துறை, ஜன.20

தென்மராட்சிப் பகுதியில் மறவன்புலோ, தனங்களப்பு, கோயிலாக்கண்டிப்பகுதிகளில் இருந்துமக்கள்இடம்பெயர்ந்து சென்று விட்டதாலும் அப் பகுதிகளுக்கு மக்கள் மீண்டும் செல்லஅனுமதி மறுக்கப்பட்டு வருவதாலும் அப் பகுதிகளில் உள்ள சுமார் முப்பது இந்து ஆலயங்கள் பூசை எதுவும் இன்றிப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளன.

பொங்கல் அன்று அப்பகுதி ஆலயங்களுக்குச் சென்ற மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

(இ-8-30)

## நூல் அன்பளிப்பு

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சுவாமி சித்ரூபானந்தா, புலோலி புற்றளை மகாவித்தியாலய சிறுவர் நூல்நிலையத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

இந்த நிகழ்வு நாளை வெள்ளி காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-4)

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 18 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

(120636 ஏ),(122787 பி), (122884 ஏ), (124610 ஏ), (124610 பி), (124610 சி), (124830 ஏ), (124830பி), (124911 ஏ), (126828 ஏ), (128226 ஏ),(128398 ஏ), (128398 பி), (128398 சி), (128523 ஏ), (128523 பி), (128537 ஏ), (128596 ஏ), (128611 ஏ), (128611 பி), [128618 ஏ], [128618பி], [128655 ஏ], [128655 பி], [128666 ஏ], [128679 ஏ], [128679 பி], [128694 ஏ]' (128694பி), (128695ஏ), (128695பி), (128736ஏ), (128736பி), (128757ஏ), (128757பி), (128780ஏ), (128797ஏ), (128841ஏ), (128841பி), (130020ஏ), (130071ஏ), (130113ஏ), (130134ஏ), (130141ஏ), (130141பி), (133342பி), (133493ஏ), (138493பி), (123606ஏ(, (134661ஏ), (133661பி), (133692ஏ), (133692பி),

**நல்லூர்**

(120550ஏ), (120589ஏ), (122787ஏ), (128461ஏ), (128587ஏ), (128741ஏ), (128741பி), (133342ஏ), (133781ஏ), (133781பி).




# இலங்கையுடனான ரெஸ்ட் போட்டியில் சொய்ப் அக்தர் ஆட அனுமதிக்குக!

### சர்வதேச கிரிக்கெட் சங்கத்திடம் கோரிக்கை

கராச்சி, ஜன. 20

பாகிஸ்தான் அணியின் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளர் எனக் கூறப்படும் சொய்ப் அக்தரை, இலங்கை அணியுடன் பாகிஸ்தான் அணி விளையாட உள்ள ரெஸ்ட் போட்டிகளில் பங்கு பெற அனுமதி வழங்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சர்வதேசக் கிரிக்கெட் சங்கத்திடம் கேட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் 30ஆம் திகதி அக்தரின் பந்துவீச்சுக்கு தடை விதித்த சர்வதேசக் கிரிக்கெட் சங்கம் ஜனவரி 8 இல் தடை உத்தரவைத் தளர்த்தி ஒரு நாள் போட்டிகளில் மட்டும் பந்து வீசுவதற்கு அக்தருக்கு அனுமதி வழங்கியது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் சிங்கப்பூரில் இடம்பெற உள்ள சர்வதேசக் கிரிக்கெட் சங்கக் கூட்டத்தில் சொய்ப் அக்தரது பந்துவீச்சு தொடர்பாக விரிவாக ஆராயப்பட உள்ளது எனவும் — அக்தரது பந்து வீச்சினது 'வீடியோ' பிரதி மூலம் அவரது பந்துவீச்சு முறை நுணுக்கமாக கண்காணிக்கப்பட உள்ளதாகவும் —

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் டௌகிர் சியா தெரிவித்துள்ளார். (இ-8-4)

## மரடோனா குணமடைகிறார்

புவனோர்ஸ் அயர்ஸ், ஜன. 20

ஆர்ஜன்டீன உதைபந்தாட்ட அணியின் முன்னாள் உதைபந்தாட்ட விற்பன்னர் டியகோ மரடோனா தமக்கு ஏற்பட்ட இருதய நோயிலிருந்து, படிப்படியாகக் குணமடைந்து வருகிறார் என மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 13 வருடங்களாகத் தொடர்ச்சியாக போதைவஸ்துக்கும், மதுவுக்கும் அடிமைப்பட்டிருந்த இவர் தற்போது புனர்வாழ்வு மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மருத்துவ மனையின் உள்ளேயும் மரடோனாவுக்கு போதைவஸ்து வழங்குவதற்கு போலி டாக்டர் போல வேஷமிட்டுச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1986 இல் ஆர்ஜன்டீன அணியை உலகச் சம்பியனாக்கிய இவர் 1997 இல் உதைபந்தாட்ட வாழ்வில் இருந்து ஓய்வுபெற்றார். பத்திரிகையாளர் மீது முறைகேடாக நடந்த குற்றச் சாட்டின் பேரில் இவர் சிறைத்தண்டனையும் அனுபவித்தார்.

தற்போது படிப்படியாகக் குணமடையும் இவர் காற்பந்து ஒன்றுடன் உடற் பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார். (இ-8-4)

## இன்றைய ஆட்டங்கள்

கொழும்பு. ஜன. 20

நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்ட இளைஞர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இடம்பெற உள்ள ஆட்டங்களில்—மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூஸிலாந்து அணியையும், ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியையும் இலங்கை அணி நேபாள அணியையும் எதிர்த்து விளையாடும். (இ-8)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் கீழுள்ளபதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஆறு பேர் பங்கு பற்றும் ஆறுஓவர்கள் கொண்டஇந்தச் சுற்றுப்போட்டி யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் குருநகர்வி.க., ஈச்சமோட்டை வி.க, யுத்காயல்வி.க,சென்நீக்கிலஸ் வி.க கிறீன்பீல்ட் வி.க, பாரதி வி.க, பாடுமீன் வி.க கிறீன்கிங்ஸ் வி.க, கொய்யாத்தோட்டம் ஐக்கிய வி.க. சென். றொக்ஸ் வி.க, ஜெட்லைன்ஸ் வி.க. அணிகள்பங்குபற்றுகின்றன. (இ-4-8)

★ ★ ★

சண்டிலிபாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலானமென்பந்து 'கிரிக்கெட்' சுற்றுப் போட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (இ-8-4)

## அரச சிறுவர் இல்லத்துக்கு தொலைக்காட்சி அன்பளிப்பு

வலி,கிழக்கு, ஜன. 20

நல்லூர் அரச சிறுவர் இல்ல சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நல்லூர்ப் பிரதேச செயலகம் ஊடாக வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு—கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம் இதனை வழங்கி உள்ளது.

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள மேற்படி சிறுவர் இல்லத்துக்குத் தேவையான தளபாடங்களை விரைவில் வழங்க சமூகசேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நல்லூர்ப் பிரதேச செயலர் எஸ். வேல்முருகோன்பிள்ளை தெரிவித்தார். (ஐ-180)

## டிரக் மோதி மரணம்

வவுனியா, ஜன. 20

இராணுவ டிரக் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் வவுனியா புதையல்புட்டி — நெலுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

அன்ரன் விஜயலட்சுமி (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-7-164)


## மக்கள் நலன்புரிச் சங்கம்

### யாழ். மாவட்டம்

இச்சங்கத்தின் பெயரால், எமது அனுமதியின்றி தமது ஆடம்பர சுயதேவைகளுக்காக ஆயிரக்கணக்காக மக்களிடமிருந்து நிதிசேகரித்து மோசடி செய்த தகவல் கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக் கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதால், சங்கத்தின் சகல தொண்டர் பயிற்சி, சேவைகள் செயற்பாடுகள் யாவும் மறு அறிவித்தல்வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் குறிப்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இவ்விடயத்தில் சகலரதும் ஒத்துழைப்பை பணிவுடன் வேண்டுகின்றோம்.

தலைவர்.

மக்கள் நலன்புரிச்சங்கம்.
யாழ். மாவட்டம்,

(சி/10711)


# தென் ஆபிரிக்க அணி இந்த வருடம் அதிக போட்டிகளில்

கேப்ரவுன், ஜன. 20

தென் ஆபிரிக்க அணி சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் 1991 இல் மீளப்பிரவேசித்தபின் இந்த ஆண்டிலேயே அதிக போட்டிகளில் கலந்துகொள்ளப் போவதாக சர்வதேசக் கிரிக்கெட் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணியுடனான ரெஸ்ட் போட்டிகளைத் தொடர்ந்து இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகள் பங்குபற்றும் முத்தரப்புப் போட்டிகளில் பங்குபற்றும். அதைத்தொடர்ந்து இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொள்ளும். பின்னர் சார்ஜாப் போட்டிகளில் இங்கிலாந்து, இந்திய அணிகளுடன் மோதி நாடு திரும்பும். அதனைத் தொடர்ந்து தாயகத்தில் இடம்பெற உள்ள ஆஸ்திரேலிய அணியுடனான ஆட்டங்களில் விளையாடும். பின்னர் சிங்கப்பூர், இலங்கை, ஆஸ்திரேலிய நாடுகளுக்கான கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொள்ளும்.

இவை அனைத்தும் தென் ஆபிரிக்க அணி அடுத்த ஆறு மாதங்களில் பங்குகொள்ள உள்ள போட்டி ஆட்டங்களே ஆகும். (இ-8-4)

## ஒருநாள் போட்டிகளிலிருந்து டரில் கலினன் ஓய்வு!

கேப்டவுன், ஜன. 20

தென்ஆபிரிக்க அணி வீரர் டரில் கலினன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்,

தென்ஆபிரிக்க அணியின் அனுபவம் வாய்ந்த வீரரும், முன்னணித் துடுப்பாட்டக்காரருமான இவர் இனி சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே தென் ஆபிரிக்க அணி சார்பாகக் கலந்து கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இளம் வீரர்களை அணியில் இடம்பெறச் செய்வதே தான் ஓய்வுபெறுவதின் முக்கிய நோக்கம் எனவும் —

அடுத்த உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் இளம் வீரர்கள் தென் ஆபிரிக்க அணியில் விளையாடி உலகக் கிண்ணத்தை நிச்சயம் கைப்பற்றுவார்கள் எனவும்— இவர் தெரிவித்துள்ளார்.

தற்போது 32 வயதுடைய இவர் 122 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 3 சதங்கள், 23 அரைச்சதங்கள் உட்பட 3628 ஓட்டங்களைக் குவித்துள்ளார். (இ-8-4)


## வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★

சைவத்தமிழும் சிவப்பணியும் தலையாய கடமையென துறவறம் பூண்டு சேவைநனைப் புரிந்துவரும்
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி (J,P)**
அவர்களின் பவள விழாவைபொட்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையினர்.
டச்சுவீதி, சாவகச்சேரி. (சி / 10706)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. இராசா அரசகுலசூரியன்
அவர்களின் தாயார்
**திருமதி இராசா மகேஸ்வரி**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் எம்மையும் இணைத்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ கனகரத்தினம் ம. ம. வி.

[72873]

உதயன்

## எட்டாப் பழமே!

சட்டத்தின் முன்னர் அனைவரும் சமமாக இருந்தால் மட்டுமே உண்மையான நீதி கிடைக்க ஏதுவாகும். ஆனால் இலங்கையில் அவ்வாறில்லை என்று சொல்லும் அளவுக்கு நிலைமை பின்னடைவு கண்டுள்ளது.

ஜனநாயகத்தின் பிரதான நான்கு தூண்களில் நீதித்துறையும் ஒன்று. ஆனால் அது வேண்டிய தகுதியுடன் அமையவில்லை என்பது பெரும் விசனத்துக்கு உரியதாகும். நீதித்துறை சுதந்திரமாக இயங்குகிறது என்பது ஒரு பக்கம். அது முழுமை பெறவில்லை என்பது மறு பக்கம்.

இலங்கையில் நீதித்துறை முழுமை அடையவில்லை என்ற குற்றச் சாட்டை நாம் சுமத்தவில்லை. நாட்டின் நீதி அமைச்சரே நீதித்துறையின் நிறைவின்மையை மிகப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்; வாக்கு மூலம் அளித்துள்ளார்!

''மனித உரிமையும் சமத்துவமும்'' என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நீதித்துறையின் குறைபாட்டை எடுத்துக் காட்டியுள்ளார். உண்மையை மறைக்காமல் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சிறுபான்மை இனத்தவர்களும் பெண்களும் எட்ட முடியாத அளவுக்கு இலங்கையின் நீதித்துறை உள்ளது — என்று அவர் தெரிவித்துள்ளார். சிறுபான்மை இன மக்களுக்கு சட்ட உதவிகள் இலகுவில் கிடைப்பதில்லை என்ற விடயத்தையும் அவர் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமன் என்ற நிலைமை உருவாக அனைவரது பங்களிப்பும் இன்றியமையாதது என்பது அவரது கருத்து. தாம் தெரிவித்த குறைபாட்டைச் சமாளிப்பதற்கான தொகுப்புரையாக அவரது இந்தக் கருத்து அமைகிறது!

சிறுபான்மை இன மக்களுக்கு பொதுவாக— எல்லாத் துறைகளிலுமே — நீதி கிடைப்பதில்லை. அவர்களது வாழ்வுரிமைகள், அரசியல் உரிமைகள் என்பன மிகப் பெரிய அளவில் மறுக்கப்படுகின்றன அல்லது ஏதோ ஒரு விதத்தில் மீறப்படுகின்றன. அரசாங்கங்கள் இயற்றிய அனேக சட்டங்கள், விதிகள் என்பன தமிழர்களுக்கு நீதி வழங்காதிருக்கப் பார்த்துக்கொள்கின்றன; கண்காணிக்கின்றன.

பாதிக்கப்பட்டவனுக்கு நீதி கிடைக்க வேண்டுமெனில் சட்டங்கள் அதற்கு உறுதுணையாக இருப்பது அவசியம். ஆனால் சிறுபான்மையினருக்கு நீதித்துறை எட்ட முடியாத, உயரத்தில் உள்ள ஒன்றாகவே இருக்கிறது. அதனால் அவர்கள் நீதிமன்றங்களிடமும், அவற்றை வழிநடத்தும் சட்டங்களிடமும் முழுமையான நீதியை எதிர்பார்க்க முடிவதில்லை. நீதி எட்டாப் பழமாக இருப்பதால் அதற்குக் கொட்டாவி விடும் நிலையிலேயே தமிழர்கள் உள்ளனர்!

இந்தக் குறைபாட்டை அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ நிவர்த்தி செய்யமுடியாது. மனமாற்றம் ஒன்றினால் மட்டுமே முழுமையான நீதியை உறுதி செய்ய முடியும் — என்று நீதி அமைச்சர் சொல்கிறார்.

அதற்கும் மேலாக —

சட்டம் இயற்றும் ஆட்சிச்சபையில் சிங்கள மக்களே பெரும் எண்ணிக்கையினராக இருக்கும் வரை, சிறுபான்மை இன மக்களுக்கு நீதி முழுமையாகக் கிடையாது என்பதே சரியானதாகும்; உண்மையும் அதுவே.

# கோப்பாய் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் நேற்று திறந்துவைப்பு

வலி. கிழக்கு, ஜன. 20

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் நேற்று வைபவரீதியாக யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதனால் திறந்து வைக்கப்பட்டது.

பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் மங்கள விளக்கு ஏற்றி நிகழ்வினைஆரம்பித்து வைத்தார்.

கட்டடத் திறப்பு விழாவைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிகஅரச அதிபர் து. வைத்திலிங்கம், கோப்பாய் பிரதேச செயலக காணிக்குழுவின் தலைவர் எஸ். சின்னமணி, பிரதேச செயலக நிர்வாக அதிகாரி எஸ். வல்லிபுரம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக படுவாளர் கே. குணராசா, வலி. தெற்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி திலகநாயகம் போல் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசாமி கட்டடத்திணைக்கள பொறியியலாளர் எஸ். கமலானந்தன் ஆகியோரும் ஊழியர்களும், பொதுமக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை புதிய கட்டடம் தொடர்பான மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

மலரின் முதற் பிரதியை கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனிடம் இருந்து யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் பெற்றுக் கொண்டார். (இ-180)

## முழு நிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தி வரும் 'முழுநிலா' நாள் கருத்தரங்கு' இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும்.

''இலங்கையின் பங்குச் சந்தை அமைப்பும் அதன் தொழிற்பாடுகளும்'' எனும் பொருளில், யாழ். பல்கலைக் கழக பொருளியற் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான வி.பி. சிவநாதன் கருத்துரை வழங்குவார். (க)

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஜன. 20

நவாலி மகா வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட அலுவலகம் மற்றும் நூலகத் திறப்பு விழா இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் அ. அலெக்சாண்டர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருநயநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்விவலயம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. சுந்தரசிவமும் — கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கம், வலி. தென் மேற்கு பிரதேசசபைத் தலைவர் வே. அன்ரன் ஜோன்சன் ஆகியோரும் — கலந்துகொள்வர். (க-90)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 20

அகவொளி, குடும்ப வளத்துணை நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு போயா தினக் கருத்தரங்கு நடைபெறும்.

'இல்லறமும் இலக்கியமும்' என்ற தலைப்பில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவர் செம்பியன் செல்வன் கருத்துரை வழங்குவார். (க)

சுன்னாகம், ஜன. 20

மானிப்பாய்புதுமடம்றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் 'புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா. சிவநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி ஜோண் டிக்சன் ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாகஅகதிகளுக்கான ஐ.நா. தூதரக வெளிக்கள அதிகாரிகளான ஜோனாஸ்முசி, பி. பாலகிருஷ்ணன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஆ. நாகேந்திரம், க. தங்கப்பிரகாசம் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-27)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 20

தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிந்து அண்மையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள டி. எம், ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது, (க)

★ ★ ★

அரியாலை, ஜன. 20

விரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதியில் மாவட்ட கூட்டுறவுச் சபையின் அலுவலகப் பகுதியில் பால் காய்ச்சும் வைபவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு இடம்பெறும்.

யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர். (க-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

இதுவரை வேலை கிடைக்காத 96 ஆம், 97 ஆம், 98 ஆம், 99ஆம் ஆண்டுக்குரிய பட்டதாரிகள் அனைவரையும் இந்தக் கூட்டத்துக்கு சமுகம் தருமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

தை 07

வெள்ளிக்கிழமை

திதி: பூரணை

முற்பகல் 11.16 வரை

நட்சத்திரம்: பூசம்

பின் இரவு 4.25 வரை

தைப்பூச நன்னாள்

சுபநேரம்: 6.35—8.05

ராகுகாலம்: 11.05–12.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

எப்படிப்பட்ட வார்த்தைப் பின்னல்களும் தோற்றுவிக்காத உணர்ச்சியை, சரியாக கையாளப்பட்ட சிறிய மௌனம் உணர்த்தி விடும்.

- மார்க் ட்வெயின்

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ். கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட பயிற்சிநெறிப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

யாழ். கல்வி வலயத்தின் 30 பாடசாலைகளைச் சேர்ந்த 782 மாணவர்கள் இந்தப் பரீட்சையில் கலந்து கொண்டனர்.

தத்தமது பாடசாலைகளின் பெறுபேறுகளை அதிபர்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கோரி உள்ளார். (இ-10)

# சிற்றூழியர்களுக்கு பதிலாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். குடாநாட்டில் உள்ள 5 தபால் நிலையங்களுக்கு சிற்றூழியர்களுக்கான பதிலாளர்கள் 133 பேர் அஞ்சல்மா அதிபரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனங்கள் வழங்கப்பட்ட தபால் நிலையங்களும் நியமனம் பெற்றோர் எண்ணிக்கையும் வருமாறு:

- ★ அளவெட்டி - 3
- ★ அனலைதீவு – 5
- ★ அச்சுவேலி – 5
- ★ சங்கானை - 1
- ★ சாவகச்சேரி - 8
- ★ சுழிபுரம் - 4
- ★ சுன்னாகம் – 5
- ★ நெடுந்தீவு - 3
- ★ கைதடி – 4
- ★ காரைநகர் - 5
- ★ கோப்பாய் – 5
- ★ கரவெட்டி - 4
- ★ ஊர்காவற்றுறை - 5
- ★ கொடிகாமம் - 3
- ★ கொக்குவில் – 5
- ★ மானிப்பாய் – 5
- ★ நயினாதீவு - 5
- ★ பண்டத்தரிப்பு – 4
- ★ பருத்தித்துறை - 8
- ★ புங்குடுதீவு - 4
- ★ உரும்பிராய் – 2
- ★ வட்டுக்கோட்டை - 1
- ★ வல்வெட்டித்துறை –6
- ★ வேலணை - 3
- ★ யாழ்ப்பாணம் – 30

மேற்படி நியமனம் பெற்ற 133 பேரும் அந்தந்தத் தபால் நிலையங்களில் நாளை காலை 9 மணிக்கு கடமைக்கு சமுகமளிக்க வேண்டுமென தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்..

இதேவேளை மேற்படி நியமனம் பெற்றவர்கள் தபால் நிலையங்களில் பணிபுரியும் சிரேஷ்ட ஊழியர்களின் லீவு, மற்றும் இளைப்பாறல் வேளைகளில் கடமையில் ஈடுபடுத்தப் படுவார்கள் எனவும் சேவை முதிர்ச்சியின் அடிப்படையிலேயே இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-10)

## வவுனியாவில் காணாமற்போன 20 பேர்

வவுனியா, ஜன. 20

புத்தாயிரமாம் ஆண்டு பிறந்ததை அடுத்து வவுனியாவில் 20 இளைஞர்கள் காணாமற்போயிருந்தனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா கிளை அதிகாரி தெரிவித்தார்.

விசாரணை நடத்தியதில் இவர்களில் 17 பேர் படையினர் வசம் இருந்ததும் இருவர் தமிழ் கட்சியின்வசம் இருந்ததும் தெரிய வந்ததாகவும் மற்றொருவர் குறித்து தகவல் இல்லை என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-164)

## சாயி சிந்தனை

சத்யம், தியாகம், தர்மம் இவையனைத்தும் சேர்ந்து மனிதத் தன்மையை உருவாக்குகின்றன. சத்யம் என்பது நீதி. தர்மம் என்பது ரீதி.எங்ஙனம் நடந்து கொள்ளவேண்டும் என்ற வழிமுறை. தியாகம் என்பது க்யாதி (புகழ், கீர்த்தி) இம் மூன்றும் இணைவதால் தான் மானவ ஜாதியே (மனிதகுலமே) உருவாகிறது. வெறும் வடிவத்தை வைத்து யாரும் ஒருவனை மனிதப் பிறவி என அழைக்கமுடியாது. சத்யத்தோடு ஒட்டிப் பழகி தர்மத்தினை உயர்த்தி தியாக உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். அனைத்து உயிரினங்களிலும் ஒற்றுமையை உருவகப்படுத்தி உணர்ந்துகொண்டு இதயத்தில் இரக்கத்துடன் நடந்து கொள்ளுங்கள். உள்ளத்தில் ஆறாத ஏக்கத்தை வளர்த்துக்கொண்டு இறைவனை ஒரு முறையாவது நினைத்துக்கொள்ளுங்கள். அப்போது தான் உங்களுக்கு இறை தரிசனம் கிடைக்கும்.

இறைவன் இருக்கிறார். வெறும் ஊனக் கண்களால் அவரைக் காண்பது என்பது இயலாது. இவ்வுலக மாயைகளை விட்டொழித்தால் மட்டுமே அவரைக் காணமுடியும். இன்றைய மனிதனின் நிலை என்ன? அவனிடம் பணம் இருக்கும் போது மிக மகிழ்ச்சியாயிருக்கிறான். அது இல்லாத போது துயரத்தில் ஆழ்கிறான். ஆடம்பரத்திலும் அனாவசிய செலவுகளிலும் செல்வத்தை இழக்கிறான். எத்தனையோ குறுக்கு வழிகளில் செல்லத் திட்டம் தீட்டுகிறான். உலகம் சூரியனைச் சுற்றுவது போல் மனிதன் பணத்தைச் சுற்றுகிறான்.

(ஆதாரம்:- சனாதனசாரதி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறி விட்டது

தம்பையா யோகநாதன் ஆகிய எனது பிரயாண பாக் 12-01-2000 திருமலையில் இருந்து வந்த கப்பலில் வந்த பொழுது காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் தவறுதலாக மாறி எடுக்கப்பட்டு விட்டது. அதனுள் உடுப்புகளும், முக்கிய சில ஆவணங்களும் இருந்தன. மாறி எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். இல. 28, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(72857)

## விற்பனைக்கு

பழைய புதிய திரைப்பட வீடியோக் கசட்டுகள் மற்றும் பழைய, புதிய திரைப் படப் போஸ்ரர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(72850)

## A/L, O/L

ஆங்கிலம் சுலபமாக இரு மாதங்களில் இலக்கண அடிப்படையில் (Spoken English) ஆண்டு 6 — 10 கற்பிக்கப்படும். வாரம் 5 மணித்தியாலம் ஆசிரியர் B.Sc. (Cey), Lond Inter 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் பின்புறம் திருநெல்வேலி, (72832)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்க. தனபால சிங்கம் இல. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி நல்லூர். (72769)

## சோதிடம்

பொய்யா மொழி சோதிடம் எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். தினமும் மாலை 2 மணிக்குப் பின் மல்லாகம் பழம்பிள்ளையார் கோயில் மடத்தில் சந்திக்கலாம்.
(72798)

## நீராடியவர் குளத்தில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 20

உறவினரின் அந்தியேட்டிக் கிரியையில் பங்கு கொள்ளச் சென்றவர், புண்ணியதானம் செய்து குளத்தில் நீராடச் சென்ற சமயம் நீரில்மூழ்கி மரணமானதாகத் தெரிவித்து ஒருவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றிக் குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கல்வியங்காடு இராசவீதியைச் சேர்ந்த நாகமுத்து இரத்தினம் (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார், (இ-135-15)

## சாமகான வாத்திய பயிற்சி நிலையம்

K.K.S வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

தைப்பூச புதிய நாள் வகுப்பு ஆரம்பம்
வெள்ளி மாலை 3.30 மணி

V. செல்வச்சந்திரன்
ஆசிரியர்.

(72860)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## சுப்பிரமணியம் பாக்கியம்

தோற்றம் 15—02—1912
மறைவு 21—12—1999

அன்பின் திருவுருவே அம்மா
நீர் பிரிந்து ஒரு திங்கள் ஆனது அம்மா
எம் துன்பம் பொறுக்காய் நீ அம்மா
என்று தீரும் உன் பிரிவுக்கவலை அம்மா
என்றும் நீ இறைவனடியில் இருக்க அம்மா
தினமும் நாம் இறைஞ்சுகின்றோம் அம்மா.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

மணியர்பதி,
கொக்குவில் மேற்கு
(72859)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15-10-1934
உதிர்வு 11-02-1998

திருமதி
## சிவயோகம் திரவியம்

திதி: 20-01-2000

வானம் வெளுக்க
கண் விழித்தல் முதலாய்
வானம் உறங்க
கண் இமைக்கும் வரை — அம்மா
நீங்களின்றி எம் வாழ்வு
வெறுமையானதே
எம் அறுசுவையும் தான்
தீர்ந்து போனதே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

31, வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
(72863)

# யாழ். லயன்ஸ் கழகம்

நடத்தும்

## இலவச கண் பரிசோதனை

இடம்:- யாழ். வைத்திய நிலையம்
166, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

காலம்;- 21 - 01 - 2000 வெள்ளிக்கிழமை
நண்பகல் 12 முதல் பிற்பகல் 2 வரை

பரிசோதிப்பவர்:- லயன் A. ஜெயக்குமார்
P. J பர்ணாண்டோ ஸ்தாபனம்

சேவைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் மேற்படி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் தமது பெயரினை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

லயன் பேராசிரியர்
இரா. சிவச்சந்திரன்
தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.

(வி/10712)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 07-02-1929
உதிர்வு: 30-01-1999

## அமரர் பொன்னம்பலம் இராஜரட்ணம்

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)

திதி: 20 – 01 – 2000

அன்புத் தெய்வமே! எங்கள் குடும்பத்தின் விளக்கே! நீங்கள் எமை விட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்ததே. ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் உங்கள் நினைவு எம் இதயங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

418, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(72862)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
## சிவகுரு இராமநாதன்

[கட்டடப் பரிசோதகர்]

21 - 12 - 99 அன்று இறைபதமடைந்த அமரர் சிவகுரு இராமநாதன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி இன்று (20-01-2000) அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(72856)

# ஆஸ்பத்திரிக் கழிவுகளை அகற்ற உழவு இயந்திரம் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன. 20

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிறிய உழவு இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக் கழிவுப் பொருள்கள் தற்போது இந்த உழவு இயந்திரத்தின் உதவியுடன் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர்களினால் அகற்றப்பட்டு வருகின்றன.

இது வரை காலமும் யாழ். மாநகர சபையினாலேயே யாழ். ஆஸ்பத்திரி குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் அகற்றப்பட்டுவந்ததாகவும்

இதற்காகத் தினமும் 400 ரூபா ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் யாழ். மாநகரசபைக்கு வழங்கப்பட்டுவந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-17)

# வழுக்கையாறு, உப்பாறு ஏரிகளில் நன்னீரைத் தேக்க பெரும் திட்டம்

## "நோராட்" உதவியுடன் செயற்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 20

வழுக்கையாறு, உப்பாறு கடல் ஏரிகளும் அவற்றினை அண்டிய 111 குளங்களும் 'நோராட்' அமைப்பினால் 43 கோடி 50 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

யாழ். மாநகர சபைப் பிரதேசத்தை சார்ந்துள்ள குறிப்பிட்ட இரு கடல் நீரேரிகளிலும் நீரைத் தேக்கி பாவனையாளர்களின் நீர்த் தேவையை வழமைக்கு கொண்டுவர இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் உப்புத் தண்ணீர் நன்னீரோடு சேராமல் இருக்கவும் கழிவுகள் கலக்காமலும் இருக்கும் வகையிலும் மழை நீர் தேக்கப்பட்டு மண்ணுக்கு அடியிலுள்ள நீரை சேகரிக்கும் தன்மை அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தினை பூர்த்தி செய்வதன் மூலம் வழுக்கை ஆறு பகுதியில் ஆயிரத்து 400 ஏக்கர் நிலமும் உப்பாறு பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலமும் விவசாய செய்கைக்கு பயன் படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-5)


உ

## இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூசம் - மஞ்சத்திருவிழா

இணுவில் கந்தசுவாமி கோயில்
மஞ்சத் திருவிழா
2000-01-21 ஆம் நாள் (தை 07 ஆம் நாள்)
வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு
நடைபெறும்.

அன்றையதினம் மதியம் 1008 சங்காபிசேகமும் விசேட பூசைகளும் நடைபெறும்.
பிற்பகல் 4.00 மணிக்கு ஆறுமுகப் பெருமான் மஞ்சத்தில் உலாவரும் காட்சி நடைபெறும்

அன்றைய தின நிகழ்ச்சிகள் யாவற்றிலும் முருகன் அடியார்கள் அனைவரும் சமுகந் தந்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன்வேண்டுகின்றோம்.

-தைப்பூசத் திருவிழா
உபயகாரர்

(72817)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

### வளலாய் ஆலடி விநாயகர் ஆலய
கட்ட நிதிக்கான

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பரிசுக்கான இலக்கங்கள்:

1 ஆவது பரிசு — 4399
2 ஆவது பரிசு — 2817
3 ஆவது பரிசு — 2299

மற்றும் 5 ஆறுதல் பரிசுகள்:
1159, 2972, 3110, 2072, 732

★ பரிசுகள் அன்பளிப்புச் செய்தவர்கள்

சக்தி ஸ்ரோர்ஸ்
வீடியோ கலாமினி
கண்ணகி அச்சகம்
ப. நோ. கூ. சங்கம் ] — அச்சுவேலி
சிந்துஜா பன்ஸி — மருதனார்மடம்
மயூரிகா ஸ்ரோர்ஸ் — வளலாய்

மு. குறிப்பு: பரிசுப் பொருள்களை 30-01-2000 -க்கு முன் பெற்று உதவுக.

திருப்பணிச்சபை

வளலாய்,
அச்சுவேலி.

(சி/10694)


# தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன 20

அகில இலங்கைத்திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன இன்று வியாழன் காலை 8 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை மேற்படி மன்றத்தால் மாதாந்தம் திருவாதிரை நட்சத்திர தினத்தன்று நடத்தவென உத்தேசிக்கப்பட்டுள்ள இல்லங்கள் தோறும் பன்னிரு திருமுறைப் பாராயணம் நிகழ்வு இன்றுபிற்பகல் 4-30 மணியளவில் கந்தர் மடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெறவுள்ளது.

(ஐ-7)

# பயிற்சி பட்டறை

பருத்தித்துறை, ஜன. 20

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 வலயக்கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர்களுக்கான விசேடபயிற்சிப் பட்டறை எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 4 தினங்களுக்கு திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

ஜீ ரி. சற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொள்ள இருக்கும் யாழ். மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த உதவிக்கல்விப்பணிப்பாளர்களுக்குத்தனித்தனியே கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளும்சகலருக்கும் போக்குவரத்துச்செலவை ஜிரிசற் அமைப்பு வழங்கவுள்ளது. (ஐ-7(


உ
குருமயம்

தவத்திரு

## ஸ்ரீ சச்சிதானந்தம் சுவாமிகளின் 40 ஆவது விதேக முத்தி தின ஞாபகார்த்த அறக்கொடை வழங்கலும் பிரார்த்தனையும்

தவத்திரு சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் முன்னிலையில்

இடம்: ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்-
கைதடி.

காலம்: 20-1-2000 வியாழக்கிழமை
காலை 9 மணி

தலைவர்: திரு. இ. குழந்தைவடிவேலு J.P
(தலைவர், ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம், கைதடி)

ஆசி வழங்குபவர்கள்;
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ மு. கணேசக் குருக்கள்
சிவஸ்ரீ யோ. குருசாமிக்குருக்கள்
சிவஸ்ரீ சி. மனோகரக்குருக்கள்

பிரதம விருந்தினர்:
திரு. பு. சுந்தரம்பிள்ளை (பிரதேச செயலர்)
(ஸ்ரீ சச்சிதானந்த பிரசுராலய ஆலோசனை சபைத் தலைவர்)

கௌரவ விருந்தினர்:
திரு. சி. சக்திகிரீவன்
(கௌரவ செயலாளர், இந்துசமயப் பேரவை)
வைத்திய கலாநிதி வ. சின்னப்பு
(ஆனந்தஜோதி வைத்தியசாலை, சாவகச்சேரி)

சிறப்பு விருந்தினர்கள்
திரு. மு. செ. சரவணபவ
(செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)
திரு. சி. சுப்பிரமணியம்
(தலைவர், தெ. மே. ப. நோ. கூ. சங்கம், கைதடி)
திரு ப.. செல்லத்துரை J.P.

### நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம்:- திரு. சு. ஜெயவிக்கினேஸ்வரன்
மங்கள விளக்கேற்றல்:- விருந்தினர்கள்
வரவேற்புரை:- திரு. சு. செல்வராசா G. S.
(பொதுச் செயலாளர், ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம், கைதடி)
தலைமை உரை:- தலைவர் .
ஆசிரமப் பணிகள்:- திரு. நா. திருச்செந்திநாதன்
(கௌரவ மேலாளர், ஸ்ரீ சச்சிதானந்த பிரசுராலயம், கைதடி)
அறக்கொடை வழங்கல்:- அறக்கொடை கொடுத்தோர்
அறக்கொடையும் ஆசிரமமும்:-
டாக்டர் K. T. S. சாரநாதன்
பிரதம விருந்தினர் உரை:-
கௌரவ விருந்தினர் உரை:-
சிறப்பு விருந்தினர் உரை:-
நன்றி உரை:- திரு. பொ. கந்தசாமி A. R.
(நிதிச் செயலாளர், ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம், கைதடி)
இறை வணக்கம்:- திரு. வ. சுப்பையா
(தலைவர் சைவ ஐக்கிய சங்கம் கைதடி)

குருவருளைப் பெற்று மகேஸ்வர பூஜையில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்பாக வேண்டுகின்றோம்.


சு. செல்வராசா G. S.
(பொதுச் செயலாளர்)
ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம்,
கைதடி.

(72836)



உ
சிவமயம்

## புதுக்கடை திறப்புவிழா




அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தை மாதம் 6 ஆம் நாள் (20-01-2000) வியாழக்கிழமை பகல் 1-26 முதல் 2-04 (ப.நே.) வரையுள்ள ரிஷப லக்கினமும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப முகூர்த்த நல்வேளையில் கீழ்க் காணும் முகவரியில்

யாழ்ப்பாண ரேடர்ஸின் சகநிறுவனமாக

### யாழ்ப்பாண இரும்பகம்
### JAFFNA HARDWARE

என்னும்பெயர் கொண்ட ஸ்தாபனத்தினைத் திறந்து நடத்த இறையருள் கூடியிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து வளம்பெற்றுவளர வாழ்த்தியருளும் வண்ணம் வேண்டுகின்றோம்.



தங்கள் நல்வரவை வேண்டி நிற்கும்:
பரராஜசிங்கம் ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன்.

யாழ்ப்பாண இரும்பகம்,
168, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண ரேடர்ஸ்,
302, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Tele:- 2509, 2806

(72852)

English / Sinhala Classes

மேற்படி வகுப்புக்கள் சம்பந்தமாக விசாரித்துச் சென்ற மாணவச் செல்வங்களுக்கும் பெற்றோருக்கும் உளம் கனிந்த நன்றி.

2000 ஆம் ஆண்டுக்குரிய வகுப்புக்களுக்கு 21-01-2000 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளும்படி மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ஆசிரியர்- T. SAGATHEVAN B.A. London
(English / Sinhala)

நீங்கள் விரும்பும் வேறு பாடங்களுக்கு பிரத்தியேகமாகவோ, சிறு குழுக்களாகவோ கற்க சிறந்த ஆசிரியர்களை ஒழுங்கு செய்து தருவோம்.

Tuition And Secretarial Service
46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(72790)

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)

பதவி வெற்றிடம்

அச்சியந்திர இயக்குநர்

பேபி சிலிண்டர் (ஸ்ராண்டட் இங்கிலாந்து)
பிளேற்றன் (கிறவுன்-ஜேர்மனி)

ஆகிய இயந்திரங்களை இயக்குதற்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்
வயதெல்லை – 25 முதல் 40 வரை
ஆகக்குறைந்த கல்வித் தகைமை – எட்டாம் தரம் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
அனுபவம் – இயந்திரங்களை இயக்கிய 3 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம்.


சம்பளச் சபைகள் கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் வழங்கப்படும். (முன் அனுபவம் கவனத்தில் கொள்ளப்படும்)

விண்ணப்பங்கள் பூரண விவரங்களையடக்கியதாக தயாரிக்கப்பட்டு, தலைவர், வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம், இல. 52, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 04 - 02 - 2000 திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

– தலைவர்

(சி/10196)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தா. தனபாலசிங்கம்
(கிராமசேவை அலுவலர்)

உதிப்பு 1951 - 02 - 13 உதிர்வு 1999 - 01 - 30

உம் துணையை நம்பியிங்கு நாமிருக்க
இறைவனுக்குத் துணையாகச் சென்றனையோ!
பாவி நெஞ்சங்கள் தாங்கிடுமோ
பூவாகி, காயாகி, பழமாகும் முன்னாலே
இராவோடு பலியாகிப் போனாயோ?
கலங்குதடா எம் மனம்
வந்திடடா வந்திடடா.

உம் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், தாய்.
அண்ணன்மார், அண்ணிமார்,
தம்பிமார், மைத்துனர்கள், தங்கை,
மைத்துனன், மருமகன், பெறாமக்கள்

3 ஆம் கட்டை வட்டக் குளத்தடி,
கட்டப்பிராய். (சி/10706)

# மட்டக்களப்பு தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 20

அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்குநிரந்தர நியமனம் வழங்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாமை ஏமாற்றத்தை அளித்துள்ளது.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மட்டக்களப்பு மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மாவட்டத்தின் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றுகின்றனர். இவர்களில் பெரும் பான்மையானவர்கள் 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரியர் நியமனத்துக்கான போட்டிப் பரீட்சையில் 70க்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அத்துடன் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையிலும் மூன்று பாடங்களில் சித்திஅடைந்துள்ளனர். நியமனத்துக்கான கல்வித் தகைமைகள் இருந்த போதிலும்இவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாதது மிகவும் பாரபட்சமான செயல் ஆகும்.

உலகவங்கி நாலாயிரம் ஆசிரியர்கள் நியமனத்துக்கான அனுமதியை வழங்கியுள்ளது.

வடக்கு—கிழக்குமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் தொண்டர் ஆசிரியர் நியமனங்களை வழங்கிய பின்பே வேறு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்று வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் கல்வி, உயர்கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடமைபுரியும் தொண்டர் ஆசிரியர்கள் தங்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்து பல போராட்டங்களில் இறங்கியுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்கள் ஏற்கனவே தங்கள் நியமனம்சம்பந்தமானகோரிக்கை ஒன்றை மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் தங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். எனினும் நிரந்தர நியமனம் இன்னும் இல்லை.

எனவே இவ்விடயத்தில் தாங்கள் உடனடிக் கவனம் செலுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்— என்றுள்ளது.

(இ-7)

## சட்டவிரோத இறைச்சி பிடிபட்டது

மானிப்பாய், ஜன. 20

களவாக மாட்டிறைச்சி வியாபாரம் செய்து வந்த ஒருவர் கையும்மெய்யுமாகப் பிடிபட்டார்.

சுன்னாகம் பிரதேச சபையின் அனுமதிபெறாமலும் சுகாதார பரிசோதகரினால் சீல் வைக்கப்படாததுமான 60 கிலோ கிராம் எடையுள்ள இறைச்சியுடன் இவர் அகப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் சுதுமலை—தாவடி வீதியில் இடம்பெற்றது.

மானிப்பாய் பொலீஸாரிடம் அகப்பட்ட இவர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

அறுபது கிலோ இறைச்சியும் எரித்து அழிக்கப்பட்டது.

(இ-90-152)

## ஜேர்மனியில் மரணம்

நாவற்குழியைச் சேர்ந்த இளைஞன்ஜேர்மனியில்அறை ஒன்றில் மூன்று தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் நமசிவாயம்(வயது 34) என்பவரே இறந்தவராவார்.

இவரது மரணத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. (இ-117)

## நுளம்புச்சுருள் சாப்பிட்ட சிறுவன்

நுளம்புச்சுருள் சாப்பிட்ட மூன்று வயதுச் சிறுவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த பற்குணநாதன் மதிஸன் என்னும் சிறுவனே சிகிச்சை பெற்றவராவார்.

இரவு எரிக்கப்பட்டு மிகுதியாக கிடந்த நுளம்புச்சுருளை இவர் சாப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 19 — 09 — 1946

உதிர்வு 31 — 01 — 1999

அமரர் இரத்தினம் கந்தசாமி

அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய் விளங்கிய எமது தெய்வமே! எம் மனங்களில் நீங்காது நிறைந்திருக்கும் எம் குடும்ப விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், நண்பர்கள்.

தகவல்:- உதயகுமார்
(மகன்)
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (72783)

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 22 — 11 — 1913

மறைவு: 22 — 12 — 1999

அமரர்
சின்னத்தம்பி சிற்றம்பலம் செல்லையா
(இளைப்பாறிய ஆசிரியர்)

நாளை (21 - 01 - 2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செ. சிற்றம்பலநாதன் - மகன்,
சி. செல்வநாயகி - மகள்,
செ. ஆனந்தசிகாமணி - மகன்

''வள்ளிமனை''
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. (72853)

இன்றைய ஓடியோ
( ) வெளியீடு!

- மனமே என்-மனமே
- திருநெல்வேலி
- அடியாத்தி
- சுராங்கனி
- ஹேராம்
- குட்லக்

**தீஸ்**
**எலெக்ரோனிக்ஸ்**
நல்லூர்
(72884)


## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 20
செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான 96 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.
இதேவேளை— குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட 44 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் —
நாளை மறுதினம் சனிக்கிழமை வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலிலும் 300 தபால் பொதிகள் எடுத்து வரப்படவுள்ளதாகவும் — தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10-30-173)

## தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன. 20
பருத்தித்துறை, தும்பளை மற்றும் குப்பிளான், ஏழாலை, மல்லாகம் ஆகிய பகுதிகளில் வடக்குப் பிரதேசங்கள் நேற்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.
(உ-15-173)

## செங்கலடியில் பிஸ்டல் குழு கைவரிசை

மட்டக்களப்பு, ஜன. 20
மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 12 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கொம்மாதுறை இராணுவ முகாமில் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் இருவர் நேற்று முன்தினம் காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தனர்.
காலை 9 மணியளவில் செங்கலடி நகரில் புலனாய்வுப் பணியில் ஈடுப்பட்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
அப்துல் ஹமீத், விக்னேஸ்வரன் ஆகியோரே காயமடைந்து மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தையடுத்து செங்கலடி நகரில் இராணுவத்தினர் தேடுதலை நடத்தினர். (ஐ)

## அறக்கொடையும் பிரார்த்தனையும்

கைதடி, ஜன. 20
தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் 40 ஆவது விதேக முத்தி ஞாபகார்த்தமாக இன்று வியாழக்கிழமை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேருக்கு அறக்கொடைகள் வழங்கப்படவுள்ளன.
ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவர் இ. குழந்தை வடிவேலு தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினர்களாக யாழ். இந்துசமயப் பேரவைச் செயலாளர் சி. சக்திகிரீவன், வைத்திய கலாநிதி வ. சின்னப்பு ஆகியோரும் — சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு. செ. சரவணபவ, தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி. சுப்பிரமணியம், கலைவாணி வித்தியாலய அதிபர் ப. செல்லத்துரை ஆகியோரும் — கலந்து கொள்வர்.
அறக்கொடை அன்பளித்தவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அறக்கொடைகளை வழங்குவர். (க-74)

## நூல் வெளியீடு

''பாலர் கதைகள்'' ''பாலர் விளையாட்டுக்கள்'' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
'யுனிசெவ்' அமைப்பின் உதவியுடன் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (உ-7)

## சமய நிகழ்வுகள்

அளவெட்டி தெற்கு மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலய திருநாட் திருப்பலியும், திருச்சொரூப பவனியும் இன்று காலை 8. 30 மணிக்கு இடம்பெறவுள்ளன.
மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (ஐ-7)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று வியாழக்கிழமை காலை ''புனித செபஸ்தியார்'' திருவிழா திருப்பலி, பூசை, வழிபாட்டுடன் இடம் பெறும்.
(உ-30)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு முடமாவடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தைப்பூசத் தினத்தன்று விசேட பூசைகள் இடம்பெற்று உற்சவம் நிறைவடையும். அன்றைய தினம் 'தமிழர் திருநாளில் தைப்பூசம்' என்னும் பொருளில் சிறப்புச் சொற் பொழிவும் இடம்பெறும். (ஐ 103)

## இன்று நடப்பவை...

[ஏழாம் பக்கத் தொடர்]
வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதையல், கைப்பணிப் பொருள் கண்காட்சி அராலி தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இன்று காலை 10மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் கா. சந்திரராசா தலைமையில் திறந்து வைக்கப்படும்.
பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச சபையின் தலைவர் ந. திரிலோகநாதன் பங்குபற்றுவார்.
(உ-30)

★ ★ ★

புத்தாயிரம் ஆண்டை வரவேற்று கரணவாய் பொன்னம்பல வித்தியாலய முறைசார்ந்த மற்றும் முறைசாராக் கல்விப் பிரிவினர் நடத்தும் கல்விக் கண்காட்சி இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.
வித்தியாலய மண்டபத்தில் க. பொன்னையாவின் தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய கணக்காளர் கே.சந்திரசேகரம் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.
(உ-15)

★ ★ ★

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு இடம்பெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் வலி. கிழக்குப் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் புதிய கட்டடத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.
அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.
(க-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் இராஜேஸ் கண்ணன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### வ. இராஜேஸ்வரன்

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

4 ஆம் வருட B பிரிவு
கலைப்பீட மாணவர்கள்.
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/10716)

## மரண அறிவித்தல்கள்

### பஞ்சநதீஸ்வரக்குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா

யாழ். சிவலிங்கப்புளியடி ஒட்டுமடத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி பஞ்சநதீஸ்வரக்குருக்கள் அமிர்தாம்பிகைஅம்மா 19-01-2000 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் இரகுநாதசர்மா, திருமதி க. தேவமணி, திருமதி க. தேஜோவதி, திருமதி சோ. பத்மாவதி, திருமதி ச. விமலாதேவி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இ. கமலாம்பிகை, காலஞ்சென்ற கனகசபாபதி ஐயர், திரு. கணேசரெட்ணசர்மா, திரு. சோமகாந்தன், காலஞ்சென்ற சர்வேஸ்வரசர்மா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கொக்குவில் சர்வேஸ்வரக் குருக்களின் சிறிய தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19 - 01 - 2000 புதன்கிழமை 28. பிரப்பங்குளம் வீதியில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. இரகுநாதசர்மா (மகன்)
தேவமணி கனகசபாபதிஐயர் (மகள்)
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

க. சுரேந்திரன்,
28, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (72888)

### திருமதி கெங்காதரன் நகுலாம்பாள்

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கைச் சேர்ந்த திருமதி கெங்காதரன்(பாலசிங்கம்) நகுலாம்பாள் அவர்கள் 19-01-2000 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.
அன்னார் அமரர் நடராஜா—இராசம்மா தம்பதிகளின் அருமை மகளும் அமரர் சோமசுந்தரம் — கனகம்மா தம்பதிகளின் அருமைமருமகளும் கெங்காதரனின் (முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், துறைமுகக் கூட்டுத்தாபனம், கொழும்பு) அன்பு மனைவியும் சிறீதரன் (ஜேர்மனி), சுபேபதினி (பிரான்ஸ்), சிவந்தினி குமுதினி, ஜெயந்தினி (ஜேர்மனி), அமரர் வினோதினி, ரதினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பழனிவேல் (பிரான்ஸ்), மகாலிங்கம் (பிரான்ஸ்), ரகுநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராஜகுமார் (அமெரிக்கா), டாக்டர் சிவபாலன் (பல்லப்பத்த) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரிநாயகி, மகாலிங்கம் கமலாம்பிகை, ரூபவதி, தயாவதி ஆகியோரின் மைத்துனியும் நாகராசா, சந்திரசேகரம், விஜயலட்சுமி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் அமரர் குமாரவேல், திருநாவுக்கரசு, அமரர் சண்முகம், அமரர் சுப்பிரமணியம் ஆகியோரின் மருமகளும் பாக்கியம், மனோன்மணி ஆகியோரின் பெறாமகளும் சௌமியாவின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று(20-1-2000) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.மகாலிங்கம் (மைத்துனர்)
அம்மன்வீதி, திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

கொழும்பு விலாசம்:
149/2, நியூகாம் சதுக்கம்,
கொழும்பு - 13,
தொலைபேசி: 451034. (72878)

## காணவில்லை

நேற்று யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு முன்பாக முற்பகல் 11-30 மணியளவில் எமது பாவனையில் உள்ள
யமகா
நியூஸ் மேற் - 50
(நீல நிறம் 500 - 1934)
மோட்டார்சைக்கிள்
காணாமல் போய்விட்டது.
எஞ்சின் இல:- 7247388
செசி இல:- 7247388
தகவல் அறிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

பொ. விவேகானந்தன்
இணுவில் தெற்கு,
இணுவில்.
T. P. No. 070-212298
(சி/10724)


## குமார் முகவர் தபால் நிலையம்

### நாளை திறப்பு விழா

நாளை 21-01-2000 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை காலை 7.05 மணி முதல்
8.35 மணி வரை உள்ள சுப நேரத்தில்

## குமார் முகவர் தபால் நிலையம்

திறந்து வைக்கப்படும். அத்தருணம் வருகை தந்து எமது நிறுவனத்தினை ஆசிர்வதித்து ஊக்குவிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குமார் ஏஜென்ட்
சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்,
மாருதி ரெக்ஸ்.

535A, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி/10733)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன இந்துநாகரிக ஆசிரியர்
திரு. இ. இராஜேஸ்கண்ணன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### திரு. வல்லிபுரம் இராஜேஸ்வரன்

அவர்களின் மறைவையொட்டி துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்களும்
A.L 2002 மாணவர்களும்

The Express Institute
IRUPALAI KOPAY

(72889)

அரசு - புலிகள்

# யுத்த நிறுத்தம் ஏற்பட பிரிட்டன் உதவ வேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை

மன்னார்,ஜன.20

யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்டு நாட்டில் அமைதியான சூழல் உருவாக பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் நேற்று மன்னாரில் தன்னைச் சந்தித்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பிரிவுக்கான திணைக்களத்தின் உப தலைவர் இயன் லின்ஸேயிடம் தெரிவித்தார்.

தொடரும் யுத்தினால் பொது மக்கள் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் -

இந்த அவலநிலை நீங்கவேண்டுமானால் சமாதானமான சூழல் ஒன்று இந்த நாட்டில் உருவாக வேண்டும் எனவும் - ஆயர் தெரிவித்தார்.

இதேவேளை மடுத்தேவாலயப் பகுதிமீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் மற்றும் இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் நிலவும் உணவுப் பிரச்சினை குறித்த விவரங்கள் ஆகியவையும் ஆயரால் பிரிட்டிஷ் அதிகாரிக்கு எடுத்துக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7-164)

## அரசின் தீர்வு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும்பும் அரசமைப்புத் திருத்தத்தை முதலில் நாடாளுமன்றத்தில் வைக்கட்டும்.

புதிய அரசமைப்பை வகுக்கும் அரசின் முயற்சிகளுக்கு நாம் தடையாக இருக்கமாட்டோம். ஆனால் அதற்கு முன்னர் அதுகுறித்து சகல கட்சிகளுடனும் அரசு பேச்சு நடத்தி உடன்பாடு காணவேண்டும் என்றே ஐ.தே.கட்சி எதிர்பார்க்கின்றது.

அரசமைப்பை மாற்றுவதற்கு தற்போது அரசு எடுக்கும் முயற்சிகளில் நாடாளுமன்றில் உள்ள சகல தரப்பினரின் கருத்துக்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது நாமும் அது தொடர்பான எமது திருத்தங்களை சபையின் முன் வைப்போம் - என்றார். (உ-3-6)

## 5 வீதிகளை மட்டுமே திருத்த முடிவு

யாழ். நகரத்தில் பெரிதும் சேதமுற்றிருக்கும் வீதிகளில் ஐந்து வீதிகளை மட்டும் -ஐம்பது லட்சம் ரூபா செலவில்- திருத்தியமைக்க வடக்கு - கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

முன்னர் ஒன்றரைக்கோடி ரூபா செலவில் யாழ்நகரில் வீதித் திருத்த வேலைகள் அவசரமாக மேற்கொள்ளப்படும் என திணைக்களத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

பிறவுண் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி, இராமநாதன் வீதி, மார்ட்டின் வீதி, நல்லூர் குறுக்கு வீதி, ஆகியவையே தற்போது திருத்தப்படவுள்ளன என்று நேற்று மாகாண சபையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம்,ஜன.20

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த முருகையா விஜயநாதன் (வயது 33) என்பவர் உரும்பிராய் சந்தியில், வைத்து நேற்றுமுன்தினம் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 16ஆம் திகதி புத்தூர் கிழக்கு ஆவரங்கால் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் ரகுபாலரமணன் நேற்றுமுன்தினம் அப்பகுதி கிராம சேவையாளர் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டார். (உ-5)

## யுத்தத்தை நிறுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துச் சேவையை நடத்த இலங்கை அரசுக்கு உலக வங்கியும், சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

* குடாநாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தும் வகையில் கொழும்பு விலையிலேயே யாழ்ப்பாணத்திலும் பொருள்கள் கிடைக்க வசதி செய்யவேண்டும்.

* வீடுகளைப் புனரமைக்க வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும்.

* குடாநாட்டில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தடுக்க மூன்று மாதத்துக்குத் தேவையான இருப்பை இங்கேயே வைத்திருக்க ஏற்பாடு செய்யவேண்டும். (உ-3-5)


**G.C.E A/L - 2000 மாணவர்களுக்கு!!!**

இம்முறை உங்களது பல்கலைக்கழக நுழைவு பொது அறிவிலும் பொதுவிவேகத்திலுமே தங்கியுள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்!

விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது

"பொதுஅறிவும் பொதுவிவேகமும்"

ஆக்கம்:– பா. கிருபாகரன [B.A (Cey)., Sp. Trd. Maths]

கிடைக்குமிடங்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்.

சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில்)

(C/10682)

**ஷண்ணின் இன்றைய வீடியோ C.D வெளியீடு**

* வானத்தை போல

திரைஅரங்க அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை

ஷண் றெக்கோடிங் ஸ்பொட்

யாழ்நகர்.

(72885)

**A/L 2002**

கணக்கீடு

D.Sam

(பிரத்தியேக வகுப்பு)

76/2 கோவில் வீதி,

யாழ்ப்பாணம்.

ஆரம்பம்

22/01/2000

(சனிக்கிழமை)

மாலை 4.00 மணி [ப.நே]

(C/10690)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

புலமைப்பரிசில் திட்டம் - 2000

மேற்படி பரீட்சைக்கான போட்டிப் பரீட்சை 23/01/2000 ஞாயிற்றுக்கிழமை 9.30a.m க்கும் CHILDRENS PROGRAMMING 11.00 a.mக்கும் நடைபெறும். இதற்கான அனுமதி அட்டைகள் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

DIRECTOR

J.T.I,
No. 07, PALALY ROAD,
JAFFNA.

(72874)

**STP Computer World**

54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel: 021-2674 E_mail: stpcom@sltnet.lk

சிறப்பு புலமைப்பரிசில் திட்டங்கள்

விண்ணப்ப முடிவு திகதி

30-01-2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

20-01-2000 Director

(C/10719)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

Jaffna, SriLanka.

REGD - 15251 T.P.No - 021-3335

**தொழிற் பயிற்சிகள்**

100 மாணவர்களுக்கு

யாழ். மாவட்டத்தில் கடந்த 20 வருடங்களாகப் பல்வேறு தொழிற்பயிற்சித் துறைகளில் பயிற்சியளித்து வரும் எமது நிறுவனம் 'மிலேனியம்' ஆண்டில் பயிற்சி பெறும் 100 மாணவர்களுக்கு பயிற்சி முடிவில் ரூபா 5000 சம்பளத்தில் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயிற்சி நெறிகள்

1. RADIO, T.V AND DECK REPAIRING
சகல இன **Radio, T.V, Video deck** மற்றும் சகல இலத்திரனியல் உபகரணங்களும் திருத்தும் முறை குறித்து ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.
**(DURATION 9 MONTHS)**

2. MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன **Motor, Fan, Transformer** என்பன **Rewinding** செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு முறை என்பன குறித்துப் பயிற்சி அளிக்கப்படும்.
**(DURATION 6 MONTHS)**

3. MOTOR CYCLE MECHANIZM
சகல இன **Motor Cycle, Water Pump** என்பன திருத்தும் முறை குறித்து ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.
**(DURATION 6 MONTHS)**

4. AIR CONDITIONING AND RFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் **Air Condition** திருத்தும் முறை குறித்து ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.
**(DURATION 6 MONTHS)**

**SPECIAL ENGLISH CLASSES**

* A/L ENGLISH 2001/2002

**A/L 2001/2002** பரீட்சையில் சித்தியடையக் கூடியவாறு **A/L** மாணவர்களுக்கென விசேட பாடத்திட்டத்துக்கு அமைய விளக்கமான வகுப்புக்கள் நடைபெறும்.

* N.C.E

CONDUCTED BY
S.THEIVATAVAPALAN

புதிய பயிற்சிகள் ஆரம்பம்

கிழமை நாள்களில் - 28/01/2000 - 9.30 A.M

சனி, ஞாயிறு நாள்களில் - 30/01/2000 - 3.00 P.M

DIRECTOR

தலைமையகம்
J.T.I
52/1 STANLY ROAD,
JAFFNA.

கிளை நிறுவனம்
J.T.I
No.7, PALALY ROAD,
JAFFNA.

(72824)

**STP Computer World**

54A, Palaly Road, Kantharmadam, Jaffna.
Tel: 021-2674 E_mail: stpcom@sltnet.lk

Module Examination:
Ms Excel and Ms Windows

Date : 23-01-2000 Sunday
Time : 9.00 a.m.
Venue : J/ Saivaprahasa Vidyalayam, Kantharmadam.

Candidates are requested to obtain their Admission cards from the office on or before 20-01-2000.

20-01-2000 (C/10720) Director


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 - 06 - 1925



ஆண்டவன் அடியில் 05 - 02 - 1993

அமரர் வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

(மாயவர்)

திதி: 20-01-2000

ஐயா!

*அன்பின் ஊற்றாய் ஆற்றலின் இருப்பிடமாய்*
*இன் சொல் பேசி ஈகையில் சிறந்து*
*உள்ளத்தில் குழந்தையாய் ஊர் போற்றும் உத்தமனாய்*
*எண்ணத்தில் தூயவனாய் ஏற்றம் நிறைந்தவனாய்*
*வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே*
*வையத்தை நீர் பிரிந்து வருடங்கள் ஏழாயிற்று*
*ஆனாலும் உம் நினைவு என்றைக்கும்*
*நிலைத்திருக்கும் எம் மனதில்.*

காளிகோவிலடி,
மல்லாகம்.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C/10708)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.